1478

15-8-55

# கண்ணன்

குழந்தைகளின் பத்திரிகை

மாதம் இரு முறை

1478/3-56

OFFICE OF THE REGISTRAR
14 SEP 1955
MADRAS



# செய்திகள்

## சுதந்தர தினம்

இந்தியா அந்நிய ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று 1947-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி சுதந்தர நாடாகியது. ஒவ்வொரு வருஷமும் இந்தத் தேதியைச் சுதந்தர தினமாக நாம் கொண்டாடுகிறோம். நாடெங்கும் இந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

## நேரு சென்னை வருகிறார்

ஜவாஹர்லால் நேரு வருகிற அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி சென்னைக்கு வருவார் என்று தெரிகிறது. பெரம்பூரிலுள்ள ரெயில்வே கோச் பாக்டரியைத் திறந்து வைப்பதற்காகவே அவர் வருகிறாராம். காந்திஜி பிறந்த அந்தத் தேதியிலிருந்து கோச் பாக்டரி வேலை செய்யத் துவங்குமாம்

## சந்திர மண்டல யாத்திரை

இன்னும் ஐந்து அல்லது பத்து வருஷங்களில் சந்திர மண்டலத்துக்கு யாத்திரை போகமுடியும் என்று ஒரு ரஷ்ய விஞ்ஞானி கூறுகிறார். ராடார் (Radar) சாதனங்களைக் கொண்டு ராக்கெட் விமானத்தைச் சந்திர மண்டலத்துக்குச் செலுத்தலாம் என்று அவர் நம்புகிறார்.

## கடிகாரத் தேனீக்கள்

சூரியன், சந்திரன் ஆகியவற்றின் உதவியில்லாமலேயே தேனீக்கள் நேரத்தைத் தெரிந்து கொள்கின்றனவாம். தேனீக்களை வெளித் தொடர்பே இல்லாதபடி அடைத்து வைத்துப் பரிசோதனை செய்து பார்த்ததில் இந்த ‹ண்மை வெளியாயிற்றும். அவை 24 மணிக்கு ஒருமுறை கணக்குப் பிரகாரம் உணவு அருந்துகின்றனவாம். அவற்றின் உடலுக்குள்ளேயே நேரத்தைக் குறிக்கும் சாதனம் ஏதோ இருக்க வேண்டும் என்று விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

## குரங்குகள் ஏற்றுமதி

இந்தியாவிலுள்ள குரங்குகள் சிலவற்றைப் பிடித்து அமெரிக்காவுக்கு அனுப்பப்போகிறார்கள். இந்தக் குரங்குகளை வைத்திய ஆராய்ச்சிக்காகவும் 'வாக்ஸின்' என்ற மருந்துத் தயாரிப்புக்காகவும் மட்டுமே ஏற்றுமதி செய்ய இந்திய சர்க்கார் இசைந்திருக்கிறார்களாம். கொண்டு போகும்போது அவற்றை ஜீவகாருண்யத்துடன் நடத்துவதாக உத்தரவாதம் செய்தால்தான் குரங்குகளை ஏற்றுமதி செய்வார்களாம்.

## தமிழில் கலைச் சொற்கள்

இனிமேல் கல்லூரிகளில்கூட தமிழிலேயே பாடங்களை நடத்த வேண்டும் என்று பலரும் விரும்புகிறார்கள். இதற்காகத் தமிழில் கலை சொற்கள் தயாரிப்பதற்காக நிபுணர் குழு ஒன்று நிறுவப்பட்டிருக்கிறது. இந்தக் குழுவுக்கு டாக்டர் லட்சுமணசாமி முதலியார் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

## ஔவை இல்லத்தில் தமிழ்ச் சங்கம்

சென்னை அடையாற்றில் பிரசித்திபெற்ற ஔவை இல்லம் அமைந்திருக்கிறது. இந்த இல்லத்தில் உள்ள பள்ளியில், அதன் தலைமை ஆசிரியையின் முயற்சியில் தமிழ்ச் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டிருக்கிறது. இந்தச் சங்கத்தின் துவக்க விழா சமீபத்தில் கண்ணன் ஆசிரியர் தலைமையில் நடைபெற்றது. பள்ளி மாணவிகள் நாட்டுப் பாடல்கள் பாடி, நடனம் ஆடிக் காட்டினார்கள்.

## பொருளடக்கம்

மலர்: 6 இதழ்: 16

15-8-'55

| | | |
|---|---|---|
| குழந்தைகளே! | பக்கம் | 2 |
| குண்டுச் சீமா | .. | 3 |
| பிச்சைக்காரப் பெண் | .. | 9 |
| கலைமான் | .. | 12 |
| வழி பிறந்தது | .. | 13 |
| சர்க்கரைப் பொங்கல் | .. | 19 |
| சகோதரர்கள் | .. | 23 |
| பாலர் கவியரங்கம் | .. | 28 |
| கேளுங்கள், சொல்கிறேன் | | 29 |
| கண்ணன் நிருபர்கள் | .. | 32 |
| பாரஸீக ரோஜா | .. | 33 |
| லீடர் மணி | .. | 35 |
| எங்கள் பகுதி | .. | 40 |

செய்திகள் - 2 - அட்டை
அதிருஷ்ட எண்கள் 3 - அட்டை

வருஷ சந்தா (தீபாவளி மலர் உள்பட) ரூ. 4/-

கலைமகள், கண்ணன், மஞ்சரி மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தா (மலர்கள் உள்பட) ரூ. 14/4

---

கதைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனைப் பெயர்களே.

## 15-7-55

### அதிருஷ்ட எண்கள்

| | | |
|---|---|---|
| முதற் பரிசு ரூ. 15/- | | .. 9223 |
| 2-ஆம் பரிசு ரூ. 10/- | | ..11952 |
| 3-ஆம் பரிசு | 1. | ..13260 |
| (தலா) ரூ. 5/- | 2. | .. 8971 |
| | 3. | .. 4151 |
| 4-ஆம் பரிசு | 1. | .. 3505 |
| (தலா) ரூ. 2/- | 2. | .. 6429 |
| | 3. | .. 4714 |
| | 4. | ..10347 |
| | 5. | .. 553 |

ஜூலை 15-ஆம் தேதி வெளியான எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் எண்கள் வெளியாகியிருக்கின்றன. அவற்றில், மேலே வெளியாகியுள்ள இந்த எண்கள் எல்லாம் அதிருஷ்ட எண்கள். இந்த எண்கள் உள்ள கண்ணன் யார் யாரிடம் இருக்கிறதோ அவர்கள் உடனே எங்களுக்கு அதை அனுப்பி அதற்குரிய பரிசைப் பெற்றுக் கொள்ளலாம்.

கண்ணனை ரிஜிஸ்தர் தபாலில் அனுப்புவது நலம்.

பரிசு பெற்றவரின் முழு விலாசம், வயது, படிக்கும் வகுப்பு, பள்ளிக்கூடம் இவற்றையும் தெளிவாக ஒரு காகிதத்தில் எழுதி அனுப்ப வேண்டும். தொடர்கதைகளைத் தவிர மற்றப் பகுதிகளும் அட்டையும் அப்படியே கிழியாமல் அனுப்ப வேண்டும். செப்டம்பர் மாதம் 1-ஆம் தேதிக்குள் கிடைக்கும்படி எங்களுக்கு அனுப்பவேண்டும். அதற்குமேல் அனுப்பினால் பரிசுத் தொகைக்கு உரியதாகாது.

—ஆசிரியர்.

# குழந்தைகளே!

ஆகஸ்டு மாதம் 15-ஆம் தேதி நம் பாரதநாடு சுதந்தரம் பெற்ற நாளாகும். இந்தச் சுதந்தரத்தைப் பெறுவதற்காக நம் பெரியோர்கள் எத்தனையோ தியாகங்கள் செய்திருக்கிறார்கள். அடிமைத் தளையை அகற்றி நாம் எல்லாரும் விடுதலை பெற்ற வீரர்களாக வாழ்வதற்காகப் பல தியாக மூர்த்திகள் தம் உயிரையே அர்ப்பணம் செய்திருக்கிறார்கள். தங்கள் வீடு, வாசல், சொத்து முதலிய உடைமைகளையெல்லாம் இழந்து தவித்திருக்கிறார்கள். தடியடி பட்டிருக்கிறார்கள்; செக்கு இழுத்திருக்கிறார்கள்; சிறையில் கிடந்து வாடி நொந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆசைக் கனவுகள் நிறைவேறிய நாளாக நாம் இந்த நாளைக் கொண்டாடுகிறோம். வானுலகில் உறையும் அவர்களுக்கு வானளாவக் கொடிகள் ஏற்றி நம் வணக்கத்தையும் நன்றியறிதலையும் காட்டுகிறோம். அவர்களுடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனைகள் செய்கிறோம். அவர்கள் அரும்பாடு பட்டுத் தேடித் தந்த இந்தச் சுதந்தரத்தை ஒற்றுமையோடு இருந்து, கண்ணிலும் மேலாகக் காப்போம் என்று இந்தப் புனித நாளில் நாம் உறுதிகொள்வோமாக!

இதுவரையில் கண்ணன் நிருபர்களாக 115 பேர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் எல்லாரும் சுதந்தர நாளிலிருந்து பணிபுரியத் தொடங்குவார்கள். கண்ணன் நிருபர்கள் அனுப்பும் விஷயங்களுக்கு என்றே சில பக்கங்களை ஒதுக்கிவிட எண்ணியிருக்கிறேன். போகப் போக இந்தப் பகுதி எப்படி அமைகிறது என்பதைக் கவனித்துப் பார்ப்போம்.

தொடர்கதைப் போட்டிக்கு வந்த கதைகளை நீதிபதிகள் படித்துப் பரிசீலனை செய்யத் தொடங்கிவிட்டார்கள். எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் போட்டி முடிவை அறிவிக்க முயலுகிறோம். இன்னும் சிலர் தொடர்கதைகளை இப்போது அனுப்பலாமா என்று எழுதி வருகிறார்கள். முடிவுத் தேதியை மாற்றிக்கொண்டே போவது சாத்தியமில்லை என்று அவர்களுக்குப் பதில் எழுதிவிட்டேன். முடிவுத் தேதிக்குள் எழுதியனுப்ப முடியாமல் போனவர்கள் தங்கள் கதைகளை அடுத்த போட்டி அறிவிக்கப்பட்டதும் அனுப்பலாம். அல்லது வேறு பத்திரிகைகளுக்கு அனுப்பலாம்.

கண்ணன் வெளியீடுகள் சரிவரக் கிடைக்கவில்லை என்று பல குழந்தைகள் புகார் செய்து எழுதியிருக்கிறார்கள். இதுவரையில் 22 புத்தகங்கள் வெளி வந்திருக்கின்றன. இன்னும் பல வரவிருக்கின்றன. ஆனால் இதுவரை வெளியானவைகளில் பாதிக்குமேல் அதாவது பன்னிரண்டு புத்தகங்கள் விற்பனையாகி முடிந்துவிட்டன. அவற்றை மீண்டும் அச்சிட்டு வருகிறோம். ஒவ்வொன்றாகத்தானே அச்சிட முடியும்? அதனால்தான் நீங்கள் கேட்கிற புத்தகங்கள் எல்லாம் உடனே உங்களுக்குக் கிடைப்பதில்லை. விரைவிலேயே எல்லாப் புத்தகங்களும் கிடைக்கும். நீங்கள் உங்கள் ஊர் ஏஜெண்டிடம் சொல்லிப் பெயரைப் பதிவு செய்து கொண்டால் தவறாமல் கிடைக்கும். நீங்கள் படிப்பதற்கும், உங்கள் நண்பர்களுக்குப் பரிசு கொடுப்பதற்கும் ஏற்ற உயர்ந்த முறையிலேயே குறைந்த விலையில் கண்ணன் வெளியீடுகள் வெளிவருகின்றன.

கண்ணன் கழகத்தில் 18,000 அங்கத்தினர்களுக்குமேல் இப்போது இருக்கிறார்கள். இவர்களில் சிலருக்குப் பதினேழு வயதாகிவிட்டதால் அவர்கள் பெயரை விலக்கிவிட வேண்டியிருக்கிறது. அதனால் புதிய அங்கத்தினர்கள் சேர்ப்பதை நிறுத்தி வைத்திருக்கிறோம். வருகிற ஜனவரி மாதம் முதல் மீண்டும் புதிய அங்கத்தினர்கள் சேர்க்கப்படுவார்கள்.

—ஆசிரியர்

# குண்டுச் சீமா

## ராஜி



### 8

திருச்சி பயணம் காலை வண்டியில் என்று தீர்மானமாயிற்று. அப்பா வந்து, ''எனக்கு முக்கிய வேலை இருப்பதால் நான் வரவில்லை. நீங்கள் போய்விட்டு வாருங்கள்'' என்று சொல்லிவிட்டார்.

இதைக் கேட்ட கீதா சந்தோஷத்தினால் குதித்தாள். ''காலை வண்டின்னா ரெயிலிலே வேடிக்கை பார்த்துண்டு போகலாம் அம்மா!'' என்று அம்மாவின் கையைப் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி வந்தாள்.

சாமா மாமாவைப் பற்றி உங்களுக்கு ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். சதா ஏதாவது பாடப் புத்தகங்களைக் கொண்டு வரச் சொல்லி ஏதாவது கேள்வி கேட்டுக் கொண்டே இருப்பார்.

அதுமாதிரி இன்றைத் தினமும் என்னைக் கூப்பிட்டு உபத்திரவப் படுத்தப் போகிறாரே என்று பயந்தேன். நல்ல வேளையாக அவரை வீட்டில் அப்பொழுது காணவில்லை. அவசர அவசரமாகச் சாப்பிட்டு விட்டுப் பள்ளிக்கூடத்திற்கு அரை மணி நேரத்துக்கு முன்பாகவே கிளம்பினேன்.

பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருக்கும் சமயத்தில், ''குண்டுச் சீமா! குண்டுச் சீமா;'' என்று யாரோ கூப்பிட்டது போல் இருந்தது. என்னோடு படிக்கும் வீராசாமிதான் கூப்பிட்டான். அவனை நாங்கள் ''வீரு'' என்றுதான் கூப்பிடுவது வழக்கம். ''சீமா, சீமா! இந்த லீவு லெட்டரை வாத்தியாரிடம் கொடுத்து விடேன்'' என்றான். அப்பொழுது லக்ஷ்மணன் என்ற பையனும் அங்கே வந்தான். ஆனால் வீரு அவனிடம் ஒன்றும் பேசாமல் முகத்தைத் திருப்பிக்கொண்டான். ''அப்பா, வீரு! பல வருஷங்களுக்கு முன்பு உன் லீவ் லெட்டரைக் கொண்டு போய்க் கொடுத்து நான் மாட்டிக் கொண்டேனே. அதிலிருந்து உன் லீவு லெட்டருன்னா எனக்குப் பயம்தான்'' என்றேன்.

''சீமா, அப்போ நடந்ததுமாதிரி இல்லையடா. நிஜமாகவே எனக்கு வயிற்று வலிடா. இந்த லீவு லெட்டர் எங்கப்பாவே எழுதிக் கொடுத்திருக்காரடா'' என்றான்.

வேண்டா வெறுப்பாக அந்த லீவு லெட்டரை வாங்கிக்கொண்டு நானும் லக்ஷ்மணனும் பள்ளிக்கூடம் போனோம்.

வழியில் நான், ''லக்ஷ்மணா! வீராசாமி லீவு லெட்டரை நீ கொண்டு போய் வாத்தியார் கிட்டே கொடுக்கிறாயா? எனக்கு அவன் லீவு லெட்டருன்னா ரொம்பப் பயம்டா'' என்றேன்.

அதற்கு லக்ஷ்மணன், ''சீமா, நானும் வீருவும் 'ஷேம்.' அதனாலே நான் கொடுக்க மாட்டேன். நீயே கொடு. இதுக்கு ஏன் பயப்படறே?'' என்று கேட்டான்.

"லக்ஷ்மணா, உனக்குத் தெரியாதா, பல வருஷங்களுக்கு முந்தி நடந்த சமாசாரம்! இது பள்ளிக்கூடத்திலே எல்லோருக்குமே தெரியுமே. உனக்குத் தெரியாதா?"

"எனக்கு எப்படிடா தெரியும்? இந்த வருஷம்தானே சேர்ந்தேன்."

"ஆமாம், ஆமாம். ஞாபகமில்லே. அந்தச் சமாசாரத்தைப் பள்ளிக்கூடம் போறத்துக்குள்ளே சொல்லி முடிக்கிறேன். வீருவின் வீட்டிலே எருமைகளும் பசுக்களும் நிறைய இருக்கும். அவர்கள் பால் விற்று ஜீவனம் செய்து வந்தார்கள். அவர்கள் வீட்டில் பெரிய மயிலைக்காளைக் கன்று ஒன்று இருந்தது. வீருவுக்கு அதன்மீது வெகு பிரியம். பள்ளிக்கூடம்போகும் பொழுதெல்லாம் தன்னுடைய புஸ்தகப்பையை வாசலில் தனக்காகக் காத்திருக்கும் அந்தக் கன்றுக் குட்டியின் கொம்பு ஒன்றில் மாட்டி விடுவான். பிறகு அதற்கு இரண்டு மூன்று வாழைப்பழங்களைக் கொடுத்துக்



கொண்டே அதைப் பள்ளிக்கூடம் வரையிலும் வேடிக்கையாக அழைத்துக் கொண்டு வருவது வழக்கம். பள்ளிக்கூடத்தை நெருங்கியவுடன் புஸ்தகப்பையை எடுத்துக்கொண்டு கன்றுக்குட்டியை வீட்டுக்கு விரட்டி விடுவான்.

''ஒரு நாள் வீரு என்னைக் கூப்பிட்டு, 'சீமா சீமா, இந்த லீவு லெட்டரை வாத்தியார்கிட்டே கொண்டு போய்க் கொடுடா' என்ருன். அந்த லீவு லெட்டரிலே வீருவுக்கு மிகுந்த ஜுரம் என்றும் அவனுக்கு அவசியம் மூன்று நாளைக்கு லீவு கொடுக்கும்படியும் எழுதியிருந்தான். அதைப் பார்த்த நான், 'ஏண்டா வீரு, ஏன் இப்படி லீவு லெட்டர் எழுதியிருக்கே?' என்றேன்.

'' 'அட போடா, பக்கத்துத் தெருவிலே மூன்று நாள் கரகம் எடுக்கப் போருங்க. நான் அங்கே போகணும். வாத்தியார் கேட்டா, அவனுக்கு நிஜமா ஜுரம், படுக்கையைவிட்டு எழுந்திருக்கவே இல்லேன்னு சொல்லுடா' என்ருன்.

''வாத்தியார் லீவு லெட்டரைப் பார்த்துவிட்டு, 'ஏண்டா சீமா,



வீருவுக்கு நல்ல ஜுரமா? இன்னிக்குக் கார்த்தாலே நான் மார்க்கெட்டுக்குப் போறபோது அவன் வீட்டு வாசலிலே கிட்டிப்புள்ளு ஆடிக்கொண்டிருந்தானே; ஜுரம்னு எழுதியிருக்கானே? நீ அவனைப் பார்த்தாயோ?' என்று கேட்டார்.

'' 'ஆமாம் சார். நீங்கள் வேறு யாரையோ பார்த்துட்டுச் சொல்றேள். நான் வறபோது பார்த்துட்டு வந்தேன். நிஜமாகவே நல்ல ஜுரம்தான் சார்' என்றேன்.

''அந்தச் சமயத்தில் தற்செயலாக ஜன்னல் பக்கம் திரும்பினேன். என்னைத் தூக்கிவாரிப் போட்டது. பள்ளிக்கூடத்தை நோக்கி நாலுகால் பாய்ச்சலில் ஒரு பெரிய கன்றுக்குட்டி ஓடி வந்து கொண்டிருந்தது. அதன் மீது யாரோ உட்கார்ந்து விரட்டுவது போல் தோன்றியது. வேகமாக ஓடிவந்து நேராகப் பள்ளிக்கூடத்து வாசற்பக்கம் இருந்த எங்கள் வகுப்புக்கு அருகில் 'தடால்' என்று வந்து நின்றது. அந்த அதிர்ச்சியினால் அதன்மீது உட்கார்ந்திருந்த வீரு தொப்பென்று கீழே விழுந்தான். அப்பொழுது அவன் கையிலிருந்து பாதி கடித்திருந்த ஒரு பெரிய மாம்பழம் கீழே விழுந்து உருண்டது. அவன் வாயெல்லாம் மாம்பழச் சாறு மஞ்சள் பூசியதுபோல் இருந்தது. வீருவைப் பார்த்து எல்லாப் பையன்களும் கைகொட்டி நகைத்தனர். நான் வீருவைப் பற்றிச் சொன்ன பொய்யை என் வாத்தியார் கண்டித்ததை என் வாழ்நாளிலேயே மறக்க முடியாது.

''அன்று சாயங்காலம் வீட்டுக்கு வந்ததும் வீரு, 'சீமா, கோவிச்சுக்காதே. நான் என்ன பண்றது? வழக்கம்போல் கன்றுக்குட்டிக்கு வாழைப்பழம் கொடுத்துவிட்டு வேடிக்கையாக மாம்பழத்தைத் தின்றுகொண்டே அதன்மீது ஏறி உட்கார்ந்தேன். படுத்துக்கொண்டிருந்த கன்றுக் குட்டி திடீரென்று எழுந்து எதிர்பாராமல் வேகமாக ஓட ஆரம்பித்தது. நான் எவ்வளவோ முயன்றும் அது நிற்கவேயில்லை. நான் வழக்கம்போல் பள்ளிக்கூடத்திற்குத்தான் போகிறேன் என்று என்னைப் பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு வந்து சேர்த்துவிட்டது. அதனால் உனக்கும் அவமானம்; எனக்கும் அவமானம்'' என்று சொன்னான்.

''அது முதற்கொண்டு யாராவது உண்மையாகவே லீவு லெட்டர் கொடுத்தால்கூட கையாலே தொடவே மாட்டேன்'' என்று முடித்தேன்.

## ௨

மறு நாள் காலையில் வீட்டில் ரெயிலுக்குக் கிளம்புவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. சாமா மாமா கையில் பிரம்புடன், ''நாழி ஆயிடுத்து, சீக்கிரம் கிளம்புங்கள்'' என்று கத்தியவண்ணம் இருந்தார். ரெயிலுக்குக் கொண்டு போகவேண்டிய சாமான்கள் யாவும் வாசற் பக்கம் கொண்டு வந்து வைக்கப்பட்டன. ''டேய் சீமா, இங்கே வாடா'' என்றார் என் மாமா. சட்டையைப் போட்டுக்கொண்டே வாசற்பக்கம் வந்தேன். ''இதோ பார், எவ்வளவு சாமான்கள் இருக்கின்றன!'' என்று சொல்லிக்கொண்டே தன் கைப்பிரம்பினால் ஒவ்வொரு சாமானையும் 'ஒன்று, இரண்டு, மூன்று' என்று எண்ணினார். ''சீமா, மொத்தம் பதிமூன்று சாமான்கள். கூஜா உள்பட எண்ணிவிட்டேன். நீதான் இந்தச் சாமான்களையெல்லாம் ஜாக்கிரதையாகப் பார்த்து ரெயிலில் ஏற்றி, திருச்சிராப்பள்ளியில் கொண்டு வந்து சேர்க்கணும். ஜாக்கிரதை'' என்றார்.

வாசலில் வண்டி வந்து நின்றதும் பதிமூன்று சாமான்களையும் எண்ணி வண்டியில் ஏற்றினேன். வண்டியில் எல்லாரும் ஏறியபிறகு, வண்டி ஸ்டேஷனை நோக்கிப் போயிற்று.

ரெயில் வரப் பத்து நிமிஷங்கள் தான் இருந்தன.

சாமான்களுடன் நான் முன்னே ஸ்டேஷன் உள்ளே போகும்போது வழியில் நின்றுகொண்டிருந்த டிக்கட் பரிசோதகர், ''டிக்கட்?'' என்று என்னைக் கேட்டார். உடனே எனக்குப் பின்னால் இருந்த மாமா

வைப் பார்த்தேன். அவர் தாத்தா வைப் பார்த்தார். தாத்தா பாட்டியைப் பார்க்க, பாட்டி என் அம்மாவைப் பார்க்க, அம்மா பக்கத்தில் நின்றுகொண்டிருந்த கீதாவைப் பார்த்தாள். கீதா அங்கே நின்றுகொண்டிருந்த தனி எஞ்சினைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஏண்டா சாமா, டிக்கெட் எல்லாத்தையும் சூரிகிட்டேயிருந்து நீ வாங்கிக்கில்லேயோ?'' என்று அவசரமாகக் கேட்டார் என் தாத்தா.

''முட்டாள்'' என்று என்னைப் பார்த்து உறுமினார் சாமா மாமா.

''என்ன மாமா, என்னைச் சாமான்களைத்தானே ஜாக்கிரதையாகப் பாத்துக்கொள்ளச் சொன்னேள்?'' என்று நான் சொல்லி முடிப்பதற்குள் எங்கள் வீட்டு வேலைக்காரன் மாணிக்கம் ஓடி வந்தான். ''ஐயா ஐயா, டிக்கட்டுகளை வெச்சுட்டு வந்துட்டீங்களே. ஐயா கொடுத்துட்டு வரச் சொன்னாரு'' என்று டிக்கட்டுகளை மாமாவிடம் கொடுத்தான்.

ரெயில் வந்ததும் ஜனங்கள் அலறிப் புடைத்துக்கொண்டு ஏறினார்கள். நாங்களும் ஏறினோம். ''ஏ சீமா, முதல்லே சாமான்களெல்லாம் சரியாக வந்துவிட்டதா என்று பார்'' என்று தம் கைப் பிரம்பினால் ஒவ்வொன்றாகப் பதிமூன்று சாமான்களையும் எண்ணினார்.

நானும் மாமாவும் நெருங்கிப் பார்க்கும் பொழுது அங்கே இடம் காலியாக இல்லை. சற்றுப் பெரிதாக ஒரு மூட்டை ஒரு பெஞ்சியில் வைக்கப்பட்டிருந்தது. மாமா அந்த மூட்டையை எடுத்துக் கீழே வைக்கலாம் என்று எடுக்கப் போனார். உடனே பக்கத்தில் பெரிய மீசையுடன் இருந்த ஒருவர், ''ஐயா, ஏன் அதை எடுங்கிறீங்க? அது இங்கே உட்கார்ந்திருந்தவரின் மூட்டை. இந்த இடத்தைப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டுக் கீழே இறங்கி, காபி சாப்பிடப் போயிருக்கிறார். நீங்க வேறு இடம் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சற்றுக் கோபமாகவே சொன்னார்.

''அப்படியா, அப்போ நான் நின்றுகொண்டிருக்கிறேன்'' என்று என் மாமா பதில் சொன்னார். இருவரும் வெகு நேரம் ஒருவரை ஒருவர் முறைத்துப் பார்த்துக்கொண்டே இருந்தார்கள்.

ரெயில் கிளம்புவதற்கு முதல் மணி அடித்தது. ''இதென்னடா இது, இந்த ஆசாமி வரவே இல்லை!'' என்று சொல்லிக் கொண்டே மீசை மனிதர் ஸ்டேஷன் பிளாட்பாரத்தை எட்டிப் பார்த்த வண்ணமாகவே இருந்தார். இரண்டாவது மணியும் அடித்தது. கார்டு தன் ஊதலை ஊதி, பச்சைக் கொடியை இப்படியும் அப்படியும் அசைத்தார். ரெயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. உடனே சாமா மாமா மிகுந்த பரபரப்புடன் பெஞ்சியில் வைத்திருந்த மூட்டையை எடுத்துப் பிளாட்பாரத்தில் விட்டெறியும் பாவனையாக அந்த மூட்டையைத் தூக்கினார். உடனே மீசை மனிதர், ''ஐயா ஐயா! ஏன் அந்த மூட்டையைத் தூக்குகிறீர்கள்?'' என்று தடுத்தார்.

இதற்கு மாமா, ''மூட்டையை விடு, ஐயா. ரெயில் கிளம்பிவிட்டது. மூட்டைக்குச் சொந்தக்காரர் வரவில்லை. பிளாட்பாரத்தில் மூட்டையைப் போட்டுவிட்டால், பாவம், அவர் மூட்டையையாவது எடுத்துக் கொள்ளட்டும்'' என்று அவர் கையிலிருந்த மூட்டையைப் பலமாகப் பிடுங்க எத்தனித்தார்.

உடனே அந்த மீசை மனிதர், ''ஐயா ஐயா, நீங்க இப்படி உட்காருங்க. கோபிச்சுக்காதிங்க'' என்று மூட்டையைக் கீழே வைத்துக்கொண்டார். அங்கு உட்கார்ந்திருந்தவர்கள் மீசை மனிதருடைய ஏமாற்றும் வித்தை அவரையே ஏமாற்றிவிட்டதே என்று ஏளனமாகச் சிரித்தார்கள்.

வண்டி ஸ்ரீரங்கம் ஸ்டேஷனுக்கு வந்தது. ''அடே சீமா, சாமான்களெல்லாம் சரியா இருக்கா பாரு'' என்று தாமே எண்ண ஆரம்பித்தார் மாமா.

சாமான்களை எண்ணியவர் மறுமுறையும் எண்ணினார். பிறகு கீழே

குனிந்து மிகுந்த பரபரப்புடன் சுற்று முற்றும் பார்த்தார்.

"பன்னிரண்டு சாமான்தான் இருக்கு. ஒரு சாமானைக் காண வில்லையே" என்று சாமா மாமா சொன்னார்.

"இது ஏதுடா சங்கடம், சாமான் களை யெல்லாம் ஜாக்கிரதையாகத் தானே பாத்துண்டு வந்தேன்?" என்று நானும் எண்ணினேன். பன்னிரெண்டுதான் இருந்தன.

"நான் எண்ணுகிறேன் பார்" என்று பாட்டி எண்ண ஆரம்பித் தாள். எண்ணி முடித்தவுடன், "எனக்குத் தெரியுமே, நீங்கள் சரி யாக எண்ணியிருக்க மாட்டீர்கள் என்று. மொத்தம் பதினாலு சாமான் இருக்கு. ஒரு சாமான் கூடவே இருக்கு" என்று சந்தோஷ மாகப் பேசினாள். 'ஒரு சாமான் கூட இருந்தால் அது சாமான்களைப் பார்த்துக் கொண்ட எனக்குத் தானே பெருமை?' என்று மாமா வைப் பார்த்தபடி நின்றேன்.

ஆனால் மாமா பொல்லாத மாமா வாச்சே! பாட்டி சொல்லுவதை அவர் நம்பவில்லை. "அதெப்படி கூட இருக்கும்?" என்று மறுபடியும் சரியாக எண்ணினார். பன்னி ரெண்டு சாமான்கள்தான் வந்தன.

காணமல்போன சாமான் என்ன வென்பது ஒருவருக்கும் சரியாக விளங்கவில்லை. உடனே பாட்டி, "ஏண்டா சீமா, இந்த ஸ்டேஷ னிலே இப்போ நமக்கு எதிரே கையில் ஒரு தடியை வைத்துக் கொண்டு இருந்தானே, அவன் இப்போதான் ஒரு மூட்டையைத் தூக்கிண்டு இறங்கினான். அடிக்கடி அந்த மூட்டையின் மேலே தட் டிண்டே இருந்தான். நீ ஓடிப்போய் பாக்கறியா?" என்றாள்.

நான் வேகமாக ஓடிப்போய், திரும்பி வந்தேன். "பாட்டி, பாட்டி! பாவம், அவன் நம்ப மூட் டையை எடுக்கல்லே. அவன் மூட் டையிலே ஒரு கோழியைக் கட் டிண்டு வந்திருக்கான். அது மூட் டைக்கு வெளியிலே தலையைத் தூக்கற போதெல்லாம் தலையை உள்ளே இழுத்துக் கொள்ளுவதற் காக மூட்டையின்மேல் தட்டிக் கொண்டு போகிறான்" என்றேன்.

இதைக் கேட்ட சாமா மாமா வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு, "இப்போ என்னடா வேடிக்கை வேண்டிருக்கு? சாமானை ஜாக்கிர தையாகப் பார்த்துக்கத் தெரி யல்லே. விளையாடறியே!" என்று கோபமாகச் சொன்னார். பிறகு அவர் அங்கு நின்றுகொண் டிருந்த கார்டைக் கூப்பிட்டு, "இது என்ன அநியாயம்! கொண்டு வந்த சாமா னில் ஒரு சாமான் திருட்டுப் போய் விட்டது. யாரிடம் போய்ச் சொல் றது?" என்றார்.

"காணுமல் போன சாமானின் அடையாளத்தைச் சொன்னால் நான் திருச்சி ஜங்ஷன் வந்தவுடன் பார்க்கிறேன்" என்றார் கார்டு.

ஆனால் ஒருவருக்காவது எந்தச் சாமான் கெட்டுப்போச்சு என்று தெரியவில்லை. யோசித்து யோசித் துப் பார்த்தார்கள். நானும் பல மாக யோசித்தேன். தடால் என்று எழுந்து குதித்தேன். "சாமான் அகப்படாது. சாமான் அகப் படாது" என்று கத்தினேன்.

"என்னடா என்னடா!" என்று கேட்டாள் அம்மா. "ஒண்ணு மில்லை, அம்மா. சாமான் கெட்டுப் போனாத்தானே அகப்படுவதற்கு?" என்றேன் நான். சாமா மாமாவுக் குக் கோபம் வந்தது. "என்னடா உளர்றே?" என்று கேட்டார்.

"இல்லே மாமா, அந்த மூட்டை காணுமே போனதுக்கு நாம்ப எல் லோரும்தான் காரணம். இன்னுமா புரியல்லே? காணமற்போனது இட்லி மூட்டை, மாமா! நாம்ப தான் விருத்தாசலம் ஸ்டேஷனிலே இட்லி எல்லாத்தையும் தின்னுட்டு அந்த இட்லி கட்டியிருந்த பழந் துணியிலே கையைத் துடைத்துக் கொண்டு, விட்டெறிந்தோமே. நீங் கதானே மாமா, அந்தத் துணியை விட்டெறிந்தது?" என்று சொன் னேன்.

உடனே மாமா, "சரி சரி, ஜங்ஷன் வந்துடுத்து. அந்தக் கார்டு கண்ணுலே படாமே ஸ்டேஷனைத் தாண்டனும்" என்று உத்தரவிட் டார். நானும் ஒரு சமர்த்துக் காரியம் செய்தோமே என்று சந்தோஷம் கொண்டேன்.

(தொடரும்)

# பிச்சைக்காரப் பெண்

**புனர்வஸு**

ராத்திரி மணி எட்டு இருக்கும். "அம்மா சோறு போடு, அம்மா. பசி காதை அடைக்குது" என்று கூவிக்கொண்டே ஒரு பிச்சைக்காரப் பெண் வாசற்படி மீது நின்றுகொண் டிருந்தாள்.

பிச்சைக்காரியின் பரிதாபமான குரலைக் கேட்டு, உள்ளே இருந்து வாசலுக்கு வந்தான் பாலு. வாசல் படிக்கட்டில் நின்றுகொண் டிருந்த பெண்ணைப் பார்த்ததும் பாலுவுக்கு மனம் இளகிவிட்டது.

அந்தச் சமயம் வீட்டில் ஒருவரும் இல்லை. அந்தப் பெண்ணிற்கு எப்படியாவது சாதம் போட வேண்டும் என்று உறுதிப் படுத்திக் கொண்டான் அவன். உள்ளே ஓடினன் வேகமாக. பெட்டியைத் திறந்தான். அதிலிருந்து இரண்டணு நாணயத்தை எடுத்தான். வாசலுக்கு மறுபடியும் வந்தான். ஆனல் அந்த பிச்சைக்காரப் பெண்ணை அவன் பாட்டி அதட்டி உருட்டவே, அவள் அழுதுகொண்டே போய்விட்டாள்.

பாலுவுக்குப் பாட்டியைக் கண்டால் பயம். ஆகையால் கையில் வைத்துக்கொண் டிருந்த இரண்டணு நாணயத்தைச் சட்டென ஜேபியில் மறைத்துக் கொண்டான். ஒன்றும் தெரியாதவன் போன்று, "என்ன பாட்டி, ஏதோ இரைந்துகொண் டிருந்தாயே, என்ன சமாசாரம்?" என்று கேட்டான். இந்தக் கேள்வியைப் பாலு கேட்கும் சமயம், அவனிடத்தில் ஆவலைக் காட்டிலும் பரிதாபம் தான் அதிகமாகக் காணப்பட்டது.

பாட்டிக்குப் பல் கிடையாது. தன் மணிபர்ஸ் வாயினல் பொரிந்து தள்ளினள். "யாரோ ஒரு பிச்சைக்காரப் பெண் இந்தப் படிமேல் நின்னுண்டு குய்யோ முறையோ என்று கத்திக்கொண்டு அழுதாள். நான் வந்து அதட்டி ஓட்டாமல் இருந்தால், அவள் நம் வீட்டினுள்ளேயே நுழைந்து இருப்பாள். நல்ல வேளை. நான் சமயம் பார்த்து வந்தேன்" என்ருள் பெருமையாக.

இதைக் கேட்டுப் பாலுவுக்குக் கோபம்தான் உண்டாயிற்று. "நீ கெட்டிக்காரி பாட்டி. உன்னை எமன்கூட ஏமாத்த முடியாதே!" என்று பாட்டியின் சேவையை மெச்சிவிட்டு வாசலுக்கு வந்தான்.

இதற்குள் அந்தப் பிச்சைக்காரப் பெண் தெருக் கோடியை அடைந்து விட்டாள். ஓடிச் சென்ருன் பாலு. அவளை அணுகி, "இந்தா பெண்ணே, இதை வச்சுக்கோ. ஏதாவது இட்டிலி, தோசை வாங்கிச் சாப்பிடு" என்று கூறிக்கொண்டே ஜேபியில் இருந்த இரண்டணுவை எடுத்துக் கொடுத்தான். அந்தச் சமயம் அவன் கண்களில் ஓர் ஆனந்தம் உண்டாயிற்று. ஆனல் அந்தப் பிச்சைக்காரப் பெண் ஏனே கண் கலங்கினுள்!

பாலு மிகவும் பரிதாபமாக, "நீ ஏன் அழுகிருய்? உனக்கு இன்னும் ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டான்.

அழுது கொண்டே அந்தப் பெண் கூறினுள். "எனக்கு வேறு ஒண்ணும் வேண்டாம், சாமி. நல்ல மனசோட இந்தப் புண்ணியம் பண்ணினீங்களே, இதுவே போதும். ஆனுல்...." என்று கூறிவிட்டு மேலும் அழவாரம்பித்தாள்.

பாலுவுக்கும் அழுகை வந்து விடும் போலிருந்தது. பதிமூன்று வயசுப் பையன், பத்து வயசுக்கும் குறைவான ஒரு பெண்ணின் முன் அழுவது என்ருல் வெட்கக் கேடான விஷயம் என்று அவன் எண்ணினன். மனத்தைத் திடப்




**தகப்பனார்(நியூஸ் ஏஜெண்ட்):** பரீட்சையிலே பாஸ் பண்ணினால் சைக்கிள் வாங்கித் தறேன்னேன். நீயோ தோத்துப் போயிட்டே. இனிமே பேப்பர் வித்துக்கிட்டிரு....

**பிள்ளை:** பேப்பர் விற்கவும் ஸைக்கிளிலேதானே போவணும்....சரியப்பா!

---

படுத்திக்கொண்டு, "உனக்கு அப்பா, அம்மா, அண்ணன், தங்கை ஒருவரும் கிடையாதா?" என்று கேட்டான்.

பதிலுக்கு அந்தப் பெண் விக்கல்களுக்கிடையே, "எல்லாரும் இருந்தாங்க ஆனால் அவங்க என்னைத் தனியாக விட்டுட்டு ரொம்ப நாளைக்கு முந்தி போயிட்டாங்க. எங்க பாட்டிதான் என்னை எடுத்து வளர்த்து வருங்க. உங்களைப் போல வயசுள்ள ஒரு அண்ணன் கூட எனக்கு உண்டென்று எங்க பாட்டி அடிக்கடி எங்கிட்டே சொல்வாள். அதனாலே உங்களைக் கண்டதும் எனக்கு என் பாட்டி சொன்னது நினைவுக்கு வந்தது" என்று கூறினாள்.

பிறகு பாலுவின் தூண்டுதலின் பேரில் அந்தப் பிச்சைக்காரப் பெண் தன் பாட்டி தன்னிடம் அடிக்கடி கூறிய கதையைக் கூற ஆரம்பித்தாள்.

* * *

"ரெண்டு வருசத்துக்கு முந்தி எங்க ஊரிலே மாரியம்மன் திருவிழா நடந்தது. அதுக்கு நானும், எங்க அம்மா, அப்பா, அண்ணன், பாட்டி எல்லாரும் போயிருந்தோம். திருவிழா ஆத்துலே நடந்துக்கிட்டு இருக்கறப்போ, ஆத்துலே எங்கிருந்தோ பெரிய வெள்ளம் வந்திடிச்சு. அந்தச் சமயம் நான் என் பாட்டியோட இருந்தேன், கரைமேலே இருந்த வண்டியிலேயே. ஆனால் ஜனங்க எல்லாரும் வெள்ளம் வந்துட்டதிலே பயந்து நாலா பக்கமும் ஓடினாங்க. ஆத்து வெள்ளத்துலே பல ஜனங்க அடிச்சிக்கிட்டுப் போயிட்டாங்க. எங்க குடும்பத்துலே மீந்தவங்க நானும் என் பாட்டியும் தான். அன்னியிலே யிருந்து இன்னைக்கி வரையும் நானும் என் பாட்டியும் ஊர் ஊராகச் சுத்தி, இப்படிப் பிச்சையெடுத்துப் பிழைக்கிறோம்" என்று கூறி அந்தப் பெண் மேலும் அழ ஆரம்பித்தாள்.


"உன் பெயரென்ன?" என்று பாலு துடிப்புடன் கேட்டான்.

அந்தப் பிச்சைக்காரப் பெண், "என் பேரு மனோரஞ்சிதம்" என்றாள் பதிலுக்கு.

இதைக் கேட்டதும் பாலுவின் முகம் பிரகாசமாகிவிட்டது. "உன் அம்மாவின் பேர் என்ன?" என்று பாலு மேலும் கேட்டான்.

"என் அம்மா பேரு செந்தாமரை" என்று கூறிய அந்தப் பெண் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

அந்தச் சமயம், பாலுவின் வீட்டில் இரவு நேரத்தில் துணைக்குப் படுப்பதற்காக வந்து கொண்




டிருந்த செந்தாமரை, பாலுவைச் சந்தித்தாள். அவனுடன்கூட இருக்கும் பெண்ணைப் பார்த்தாள். அதற்குள் பாலுவே முந்திக் கொண்டுவிட்டான்.

''என்ன செந்தாமரை, இவள் உன் பெண் மனோரஞ்சிதமே தான்'' என்றான் பேராவலாக.

செந்தாமரை ஆனந்தக் கண்ணீர் சொரிந்தபடி, ''என் கண்ணு மனோரஞ்சிதமா?'' என்று அவளைச் சேர்த்துக் கட்டிக்கொண்டாள்.


மனோரஞ்சிதத்திற்கு ஒன்றுமே புரியவில்லை: அவள் செந்தாமரையின் அரவணைப்பில் திக்கு முக்காடி விட்டாள்.

அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்த பாலுவின் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பொல பொலவெனப் பெருகிக் கீழே உதிர்ந்தது. அச்சமயம் அவன் ஒரு பெருமூச்சு விட்டான்.

அந்த மூச்சில்,'தான் ஒரு மகத்தான கடமையைச் செய்து விட்டோம்' என்ற ஒரு பெருமை வெளிப்பட்டது.

# கலைமான்

குஞ்சு



நீர்ச்சுனையும் புதரும் நிறைந்த அழகான காட்டுப் பிரதேசம். அருவிக் கரை அழகு பூத்து விளங்கியது. அங்கே இஷ்டப்படி சுற்றி யலைந்துவிட்டு, ஓடியாடிக் களைத்துவந்தது ஒரு கலைமான். அதற்குத் தாகம். கப்பும் கிளையுமாக நீண்டிருந்த கொம்புகளுடன் அது ஒய்யாரமாகக் குனிந்து அருவி நீரைப் பருகியது.

தெளிந்த அருவி நீர் அதன் தாகத்தைத் தணித்தது. ஆயினும் கலைமான் குனிந்த தலையை நிமிரவில்லை. அதன் அழகிய பிம்பம் அந்த நீரில் கண்ணாடிபோலத் தெரிந்தது.

மானுக்குப் பெருமை பிடிபடவில்லை. தன் அழகைக் கண்டு தானே மயங்கிற்று. ''எத்தனை கம்பீரமான கொம்பு! இந்த மாதிரிக் கொம்பு வேறு எந்தப் பிராணிக்கு இருக்கிறது! ஆகா, ராஜமகுடம் வைத்ததுபோல் என்ன அமைப்பாக விளங்குகிறது!'' என்று அது தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டது.

முகம், உடல் எல்லாவற்றையும் கண்டு பெருமை கொண்ட மான், உடனே முகத்தைச் சுளுக்கிக் கொண்டது. ''இவ்வளவு அழகான கொம்புகளையும் முகத்தையும் உடலையும் படைத்த கடவுள் எனக்கு ஏன் இந்தக் குச்சி குச்சியான கால்களைப் படைத்தார்! அப்பா! எவ்வளவு மெலிந்த கால்கள்! எனக்கே பார்க்கப் பிடிக்கவில்லையே!'' என்று வருந்தியது. அதன் வருத்தம் தீர்வதற்குள் பின்னால் புதர் அசைவதுபோல் இருந்தது. மெதுவாக ஓர் உறுமல் சப்தமும் கேட்டது. மான் மிரண்டது. பின்னால் பார்த்தால், நெருப்புக் கண்களுடன் ஒரு புலி!

புலி மெல்லப் பதுங்குவதைப் பார்த்ததோ இல்லையோ, மான் தலைதெறிக்க ஓடத் தொடங்கியது. ஓட்டம் என்றால் சாமானிய ஓட்டம் இல்லை. கண், மண் தெரியாத ஓட்டம் ஓடியது. புலி அவ்வளவு லேசில் கண்ணில் அகப்பட்ட ஒரு கொழுத்த மானை விட்டுவிடுமா? நாக்கை நெட்டையிட்டுக்கொண்டு துரத்தியது. மான் காற்றில் பறப்பதுபோல ஓடியது. பின்னங்கால்கள் இரண்டும் சுருள் கம்பி மாதிரி எழும்பிக் கொடுக்க, முன்னங்கால்களால் தாவித் தாவி ஓடியது.

புலி, வெகு தூரத்துக்குப் பின்னால் வந்துகொண் டிருந்தது. இருந்தாலும் அது நெருங்குவதற்குள் தப்பித்துக்கொள்ள வேண்டுமே! மான் பின்னால் பார்த்துக்கொண்டே ஓட, கொம்புகள் மேலே இருந்த கொடிகளில் போய் சிக்கிக் கொண்டது. 'இதென்ன சங்கடம்!' என்று மான் கொம்புகளை இழுக்க முயன்றது. வந்தால்தானே! அது நன்றாகக் கொடிகளினுள்ளே போய் அகப்பட்டுக் கொண்டுவிட்டது.

மான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு எப்படி எப்படியெல்லாமோ முக்கித் திணறி, கொம்புகளை விடுவித்துக் கொண்டது. 'கடவுளே! கால்கள் அழகாக இல்லை என்று நினைத்தேன். அவை என் உயிரையே காக்கின்றன, ஆனால் என் உயிருக்கே உலை வைக்கும் இந்தக் கொம்புகளை நான் அழகு என்று வர்ணித்தேனே!' என்று எண்ணிக் கொண்டே அது புலி வருவதற்குள் மாயமாய் மறைந்து ஓடியது.





# வழி பிறந்தது

சுண்டு

கிரிஜா: அம்மா! அம்மா!

அம்மா: ஏன் கிரிஜா!

கிரிஜா: ஏதோ மேளச் சத்தம் கேக்கறதே!

அம்மா: உம் .. கல்யாண நாளோல்லேயோ, வீட்டுக்கு வீடு மேளச் சத்தம்தான். (பெருமூச்சு) உம்..உம்..

கிரிஜா: என்ன அம்மா பெரு மூச்சு விடறே?

அம்மா; ஒண்ணுமில்லே!

கிரிஜா: இல்லே! என்னமோ சட்டுன்னு மறைக்கிறே!

அம்மா: நான் மறைக்கவுமில்லே, கரைக்கவுமில்லே. தொந்தரவு பண்ணுதே! போ!

கிரிஜா: உன் மூஞ்சியே சொல்றதே, வருத்தப்படறேன்னுட்டு. ஏம்மா பொய் சொல்றே?

அம்மா: நான் வருத்தப்படத்தானே பிறந்திருக்கேன்! அதனுலே வருத்தப்படறேன். நீங்கள்ளாம் சந்தோஷமா இருக்கணுமே, அதுக்காகத்தான் வருத்தப்படறேன். போயேன்!

கிரிஜா: நானும் கோபுவும் சந்தோஷமாத்தானே இருக்கோம்? நீ எதுக்காக வருத்தப்படறே?

அம்மா: உம் .. சந்தோஷமாத்தான் இதுவரையிலே இருந்தேள். ஆனு..

கிரிஜா: ஆனு என்னம்மா ஆனு, ஆவன்னு இல்லாமே?

அம்மா: நிலத்தை விற்று விற்று இது வரையிலே உங்களை எப்படியோ காப்பாத்திப் பிட்டேன். இனிமே விக்கிறதுக்கு என்னண்டே குழி நிலம்கூட இல்லே.

கிரிஜா: என்ன, எல்லாத்தையுமா வித்துப்புட்டே?

அம்மா: எல்லாத்தையுமான்னு, அப்படி எவ்வளவு இருந்துட்டுது! இருந்ததே கொஞ்சந்தானே.

அதை வித்தாச்சு; சாப்பிட்டாச்சு!

கிரிஜா: அப்போ நாம் இனிமே என்னம்மா பண்றது?

அம்மா: அதை நெனைச்சுத்தான் வருத்தப்பட்டேன். கொஞ்ச நாள் கஷ்டப்பட்டால், பின்னால் ஒரு வழி பிறக்கும்னு சொல்லுவா, நமக்கு என்னடான்னு இருந்த வழியும் போயிடுத்து.

கிரிஜா: எல்லாம் இந்த அப்பாவாலேதானே இவ்வளவு கஷ்டமும் நமக்கு!

அம்மா: அவரை ஒண்ணும் சொல்லாதேம்மா! எல்லாம் நம் தலையிலே எழுதினபடிதானே நடக்கும்? அவர் மேலே வீண் பழி வந்தது. அவமானம் தாங்காமெ எங்கேயோ புறப்பட்டுப் போயிட்டார்! அவர் போய் இன்னிக்குப் பத்து வருஷம் ஆகறது; இருக்கிற இடமே தெரியல்லே. என்னிக்கு இருந்தாலும் உங்களை எல்லாம் பாக்கணும்னுவது வருவார்னு தான் எண்ணிண்டிருக்கேன்.

கிரிஜா: வரட்டும், போகட்டும். இனிமே நாம்ப என்னம்மா பண்றது? அதைச் சொல்லு இப்போ முதல்லே!

அம்மா: எனக்கு ஒண்ணும் தோணல்லே! உன் படிப்பையும் கோபுவின் படிப்பையும் பாதியிலே நிறுத்த..

கிரிஜா: ஆ! எங்க படிப்பையா? பாதியிலே நிறுத்தவா போறே! (விம்மல்)

* * *

சுந்தர்: என்னப்பா கோபு! ஏன் என்னமோ போல இருக்கே?

கோபு: ஒண்ணுமில்லே சுந்தர்.

சுந்தர்; பாத்தியா, பாத்தியா எங்கிட்டேயே ஒளிக்கிறியே?

கோபு: ஒளிக்கல்லே சுந்தர்! உங்கிட்டே சொல்றதுக்கென்ன? எனக்கு - உங்க அப்பா கிட்டே சொல்லி, எப்படியாவது ஒரு வேலை போட்டுத் தரச் சொல்லேன்.

சுந்தர்: வேலையா?

கோபு: ஆமாம் சுந்தர்.

சுந்தர்: அப்போ உன் படிப்பு?

கோபு: இந்த மாசத்தோடு சரி!

சுந்தர்: அப்புறம்?

கோபு: நிறுத்திட வேண்டியது தான்!

சுந்தர்: ஏன் கோபு?

கோபு: அதுக்கு மேலே தயவு செய்து ஒண்ணும் கேக்காதே.

சுந்தர்: என்ன கோபு இது? உன்னை இந்த வருஷத்து டீமுக்குக் காப்டனா வேறே தேர்ந்தெடுத்திருக்கோம்..

கோபு: காப்டனாவா? என்னையா?

சுந்தர்: ஆமாம் கோபு. நேற்று நீ வரல்லியே சாயங்காலம்! அப்போ நான்தான் உன் பேரைச் சொன்னேன். போட்டியா மோகன் நின்னான். ஓட் எடுத்தோம். உனக்குத்தான் ஜயம்!

கோபு: உம் .. உங்களோடே எல்லாம் இருக்க எனக்குக் கொடுத்துவைக்கலே. அவ்வளவு தான்! நான் இதுக்கு மேலே என்ன சொல்லப்போறேன்..அது சரி..எனக்கு எப்படியாவது இந்த மாசத்துக்குள்ளே ஒரு வேலை வாங்கிக் கொடுக்கச் சொல்லேன் உங்க அப்பாவை!

சுந்தர்: இதுதான் உன் முடிவா கோபு?

கோபு: எனக்கு வேறு வழி இல்லையே, சுந்தர்.

சுந்தர்: மனமிருந்தால் கூடவா?

கோபு: மனம் இருக்கிறது. ஆனால் குடும்ப நிலை வழிவிடவில்லையே. நேற்றுக்கூட வேலை தேடத்தான் போனேன்.

சுந்தர்: அதான் வரல்லியா நீ?

கோபு: ஆமாம். ஆனால் போயும் பிரயோஜனமில்லை. எவன் நாலாம் பாரத்துக்கும் ஐந்தாம் பாரத்துக்கும் வேலை தறேன் என்கிறான். நடைதான் கண்ட பலன்!

சுந்தர்: ஐ ஆம் ஸாரி, கோபு!

கோபு! எனக்கும் வருத்தமாத்தான் இருக்கு. உங்களையெல்லாம் விட்டுப் போகணுமேன்னு.... என்ன பண்றது, சுந்தர்?

சுந்தர்: சரி, நீ இவ்வளவு தூரம் சொல்றப்போ நான் அதுக்கு மேலே என்ன சொல்லப் போறேன்!

கோபு: எங்கப்பாவும் உங்க அப்பாவும் சேர்ந்து ஒரே ஆபீஸிலேதான் இருந்தா—

சுந்தர்: தெரியுமே எனக்கு.
கோபு: தெரியாமெ என்ன? தெரிஞ்சிருக்கும். எங்கப்பா கிட்டே உங்க அப்பாவுக்கு ரொம்பப் பிரியமாம். அதனாலே—
சுந்தர்: நான் கட்டாயம் சொல்றேன், கோபு...ஆனா அவருந்தான் உனக்கு எப்படி வேலே செய்து வைக்க முடியும்? உனக்கு பதினாலு வயசுகூட முடியல்லியே.
கோபு: சொல்லிப் பாரேன்.

* * *

[சைக்கிள் மணியோசை: டிரிங் டிரிங்]

அருண்: ஹலோ! மோகன்! என்னப்பா சேதி! மூகத்திலே சிரிப்பு கொம்மாளம் போடறதே!
ரகு: அவனுக்கு என்னப்பா கவலே? கையிலே சைக்கிள் இருக்கு; சாப்பிட வேண்டியது, ஜோரா ஊர் சுத்த வேண்டியது. ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கற மானேஜர் பிள்ளே! அவன் என்ன உன்னேயும் என்னேயும் போலவா?
மோகன்: சரி..உங்க. புரானம் எல்லாம் இருக்கட்டும்..கோபுவோடே நியூஸ் தெரியுமா உங்களுக்கு!
அருண்: என்ன?
ரகு: எந்தக் கோபு காப்டன் கோபுவையா சொல்றே?
மோகன்: அவனேயேதான் சொல்றேன்.
அருண்: என்ன? சட்டுனு சொல்லேன். கோபுவுக்கு என்ன?
மோகன்: அட என்னப்பா பறக்கறீங்க? அவனுக்கு எல்லாருமாச் சேர்ந்து ஒட்டுப் போட்டீங்கலே, முந்தாநாலு—முலுசா மூனு நாலுகூட ஆவல்லே. அதுக்குல்லே ஐயா அவுட்!
அருண், ரகு: என்னடா பாவி! என்ன சொல்றே?
மோகன்; பதறு தீங்கடா பில்லேங்கலா! அவுட்டுன்னதும் அப்படியே காபரா ஆயிட்டீங்கலே. அவுட்டுன்னா ஆலு குலோசுன்னு என்னிப்பிட்டிங்கலா? இல்லே, தம்பிகலா, இல்லே..ஐயா பல்லிக்கூடத்தையே விட்டுப்புடப் போருரு.

ரகு: பல்லிக்கூடமாவது; பாம்புக்கூடமாவதுடா? ஒழுங்கா சொல்லித் தொலேயேன்!
மோகன்: நம்பலுக்குப் போட்டியா நின்னுருல்லே; வந்திச்சி, படிப்புக்கே மோசம்!
அருண்: அப்புறம்?
மோகன்: அப்புறம் என்ன தம்பி அப்புறம்? விலுப்புரம்; அல்லாம் நிதானமாப் பேசிக்கிறலாம். நம்பலுக்கு நெறைய வேலே கெடக்குது.
(சைக்கிள் மணி ஓசை: டிரிங் டிரிங்!)
அருண்: ம்..பிரமாத வேலே! கோபு படிப்பை விட்ட நியூஸ் சொல்லத்தான் ஒடரூன், 'நம்மலுக்கு, நிம்பலுக்கு'ன்னு சொல்விண்டு!
ரகு: அவ அப்பாவாலேதான் கோபுவோடே அப்பாவுக்கு வேலே போச்சாமே, உண்மையா?
அருண்: யாரு கண்டாங்க! இருந்தாலும் இருக்கும். அந்த மனுஷன் எதை வேணுமானாலும் செய்வார் போலத்தான் இருக்கு. விட்டுத் தள்ளு!

* * *

பத்மினி: கல்பனா, ஒரு 'பாட்' 'நியூஸ்.' தெரியுமா உனக்கு?
கல்பனா: தெரியுமே—
பத்மினி: கிரிஜா நியூஸ்தானே சொல்றே!
கல்பனா: அதைத்தான் சொல்றேன், பத்மினி. அதைவிட மோசமான நியூஸ் வேறே என்ன இருக்கு? பாவம்! ஆப் இயர்லி பரீட்சையிலே கணக்குலே நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கா! தமிழ்லே நைன்டி ஸெவன்.
பத்மினி: தமிழ்லேன்னு இங்கிலீஷ்லே சொல்றியே. தொண்ணூத் தேழுன்னு சொல்லேன்;
கல்பனா: அப்படிப் பட்டவ படிப்பை நிறுத்தறதுன்னா பாவமா இல்லே?
பத்மினி: பாவந்தான்! நேத்துத்தான் கேள்விப்பட்டேன். அதைக் கேட்டதிலிருந்து என் மனசு எப்படிக் கஷ்டப்படறது, தெரியுமா?
கல்பனா: நேத்துத்தான் தெரியுமா?

பத்மினி: நேத்துத்தான் எங்க சித்தப்பா கிட்டே வேலை வேணும்னு கோபு வந்தானும். எங்க சித்தப்பாகூடத் திட்டினர். படிக்கறதுக்கு அவரே பணம் தரேன்னு கூடச் சொன்னர். கோபுதான் மாட்டேன்னுட்டான். 'படிக்கிறது சரி; சாப்பிட வேண்டாமா, எப்படி மூணு பேரும் சாப்பிடறது?'ன்னு கேட்டான்.

கல்பனு: உங்க சித்தப்பா ஒரு வேலை கொடுக்கப்படாதா அவனுக்கு?

பத்மினி: இப்ப அவருக்கும் மோகனுடைய அப்பாவுக்கும் ஆபீஸிலே ஏதோ தாங்கலா இருக்காம். அதனுலே ஒண்ணும் செய்ய முடியல்லியாம்.

கல்பனு: ஓ! இதெல்லாம் கேக்கறப்போ மனசு ரொம்ப சங்கடமா இருக்கு.

(வனஜா வருகிருள்.)

வனஜா: ஐயோ பாவம்! ஏம்மா இப்படி எதுக்கோ சங்கடப்படறீங்க?

பத்மினி: ஓ! வனஜாவா? அங்கே வரப்பவே இங்கே வாசனை தூக்கறதே!

கல்பனு: அவ போட்டிண்டிருக்கிற கூலிங் கிளாஸ் ஒண்ணு போருமே!

வனஜா: இந்தக் கதை இருக்கட்டும், விஷயத்தைச் சொல்லுங்க. எதுக்குச் சங்கடம்?

கல்பனு: நம்ப கிரிஜாவைப் பத்திப் பேசிக்கொண்டிருந்தோம்.

வனஜா: நம்ப கிரிஜான்னு உனக்குச் சொந்தமா அவ?

பத்மினி: சிச்சீ! நம்பளோடே படிச்சவ என்கிறதனுலே சொல்ருே!

வனஜா: இவ்வளவுதானே? இதுக்கா சங்கடம் உங்களுக்கு!

கல்பனு: என்ன வனஜா, இப்படிச் சொல்றே? உனக்கு வருத்தமா இல்லியா!

வனஜா: எதுக்கு வருத்தம்? நான் யாரோ, அவ யாரோ? அதிலே நம்பளுக்கு என்ன வருத்தம்?

பத்மினி: நம்பளுக்குன்னு சொல்லாதே. உனக்கு மட்டும் சொல்லிக்கோ!

வனஜா: சரி எனக்குத்தான்! வெச்சுக்கோயேன். நான் ஏன் வருத்தப்படணும்? அப்படிப் பார்க்கப் போனு அவ அப்பா ஆபீசுக்கு இரண்டாயிரம் ரூபாய் மோசம் செய்துட்டுப் போயிட்டார். அதுக்குக்கூடத்தான் வருத்தப்படணும்—

கல்பனு: இதோ பார் வனஜா.. நமக்குத் தெரிஞ்ச விஷயத்தைப் பேசு. பெரியவர்கள் சமாசாரமெல்லாம் நமக்குச் சரியாத் தெரியாது. அதைப் பேச வேண்டாம்.

வனஜா: உனக்கு வேணுமானு தெரியாமல் இருக்கலாம். எனக்குத் தெரியும். என் தம்பி மோகனுக்குக்கூடத் தெரியும். அப்புறம் என்ன?

பத்மினி: சரி, எனக்கு வேலை இருக்கு. நான் வறேன்,

கல்பனு: என்ன பத்மினி, நீ போறே? எனக்கு மட்டும் வேலை இல்லையா! வனஜாவைப் போலவா நான்!

வனஜா: சரி, போங்க. இனிமே இதுக்கெல்லாம் சங்கடப்படாதீங்க!

* * *

[கடைத் தெரு: ஜனக் கும்பல்]

குரல்-1: ஒடியா ராஜா, ஒன்றீணு ரெண்ட்றீணு! எதை எடுத்தாலும் ஒன்றீணு இரண்டிரீணு!

குரல்-2: கருவேலம் பட்டை, கல்நார் பல்பொடி-பாக்கெட் ஒரணு!

குரல்-3: பனியன்ஸ்-ரூபாய்க்கு மூணு பனியன்ஸ்!

குரல்-4: சார்! ஆப் அணு ஸார்! பிளீஸ் ஸார்! நேமத்தான்பட்டி ஸார்! நேத்திலேருந்து பட்டினி ஸார்! ஸார், ஆப் அணு ஸார்!

கோபு: பேனு ரிப்பேர்! பேனு ரிப்பேர்!

மோகன்: ஏம்ப்பா! இந்தப் பேனு கசியுது. ரிப்பேர் பண்ணித் தருவியா? புதுப் பேனு-நம்பலேக் கடைக்காரன் ஏமாத்திட்டான்!

கோபு: ஓ! கொண்டா, பார்க்கலாம்!

மோகன்: யாருப்பா நீ, நம்ப கோபு இல்லே? என்னப்பா பேனு ரிப்பேர்லே இறங்கிட்டே?




கோபு: ஆமாம்ப்பா மோகன்.. நாணயமான தொழில், தெரிஞ்ச தொழில்..வாங்க ஸார்! என்ன வேணும்?

ஒரு பெரியவர்: இந்தப் பேனு பட்டை அடிக்கறது. ரிப்பேர் பண்ண முடியுமா?

கோபு: ஓ! முடியுமே!

பெரியவர்: என்ன கேக்கிறே?

கோபு: கொடுக்கிறதைக் கொடுங்கோ, ஸார்!

மோகன்: கோபு! நம்பனுக்கு நாலி ஆவுது. சீக்கிரம் பண்ணிக் கொடு.

கோபு: மோகன்! மோகன்! (பரபரப்புடன்) அதோ பார்! உங்க அப்பா!

மோகன்: எங்கே, எங்கே?

கோபு: அதோ! கையிலே விலங்கு! ஓடு மோகன்! ஓடு!

மோகன்: (இரைந்து) அப்பா? அப்பா! (ஓடுகிறுன்)

பெரியவர்: அவன் பிள்ளையா இவன்? பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுத்தானே ஆகவேண்டும்?

கோபு: ஸார்! யாரைச் சொல் றீங்க?

பெரியவர்: அதோ கையிலே விலங்கு மாட்டி, காரிலே ஏற்று கிருர்களே ஒருவனை-அவனைத்தான் சொல்கிறேன்!

கோபு: அவரைத் தெரியுமா உங்களுக்கு?

பெரியவர்: தெரியுமாவா? அவன்தானே என் குடியைக் கெடுத் தவன்!

கோபு: என்ன?

பெரியவர்: இவன்தான் தம்பி, என் குடியைக் கெடுத்து, என்னை ஊரைவிட்டே ஓடச் செய்தவன்! துரோகி! என்மீது வீண் பழி சுமத்தி என் மனைவி, குழந்தைகள் முகத்திலேயே விழிக்காமல் செய்த பாவியப்பா இவன்!

கோபு: ஆனால் உங்களுக்கு இந்த ஊர் இல்லையா?

பெரியவர்; இந்த ஊரில் இருந்தவன்தானப்பா! பத்து வருஷம் கழித்து இன்னிக்குத்தான் ஊர் திரும்பியிருக்கேன்!

கோபு: என்ன, பத்து வருஷமாவா? (அவருடைய பேனாவில் இருந்த பெயரைப் படித்துவிட்டு) ஸார்! உங்களுக்குக் கிரிஜான்னு ஒரு பெண்ணும் கோபுன்னு ஒரு பிள்ளையும் உண்டு, இல்லே?

பெரியவர்: ஹா! என்னது! ஆமாம்; உண்டு, உனக்கு எப்படித் தெரிஞ்சுது அவங்களை!

கோபு: அப்பா! நான்தான் அந்தக் கோபு. உங்கள் பிள்ளை! படிப்பை நிறுத்திப் பத்து நாளாச்சு. வேறே வேலை கிடைக்காமே இந்த வேலை செய்யறேன்!

பெரியவர்: ஹா! என் செல்வமே! என் கோபுவா நீ?

* * *

பத்மினி: ஹலோ கிரிஜா! கங்கிராஜுலேஷன்ஸ்!

கிரிஜா: தாங்க் யூ!

பத்மினி: உங்க அப்பாவுக்கு வந்த மறுநாளே மானேஜர் வேலை கொடுத்திட்டாங்களாமே!

கிரிஜா: எல்லாம் உன் சித்தப்பாவின் அரிய முயற்சியினாலேதான், பத்மினி!

பத்மினி: மறுபடியும் நீ பள்ளிக்கூடத்திலே வந்து சேர்ந்தியே—அதுவே போதும்!

கோபு: நீங்கள் எல்லாம் வருத்தப்படுவதைக் கண்டு கடவுள் இரக்கங்கொண்டார். எங்களுக்கு வழியும் பிறந்தது, சுந்தர்!

அருண், ரகு, சுந்தர்: கோபு! காப்டன் பதவி காலியாவே இருக்கு உனக்காக!

கோபு: வணக்கம்; வாங்க போகலாம்! (திரை)

---

## அருமையான சம்பவம்

என் ஏழு வயதுத் தம்பி ரமணிக்குப் பூகோள பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தேன். நான் பூமி சுற்றுகிறது என்று சொன்னதை அவன் நம்பவில்லை.

''ஏன் அண்ணா, பூமி சுற்றினால் நமக்கு மயக்கமாக வராதா? நாமெல்லாம் கீழே விழுந்துவிடமாட்டோமா? அது சுத்தப் புளுகு. நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்'' என்றான் ரமணி.

நான் அதற்குப் பலவித காரணங்களை எடுத்துச் சொல்லியும், அவன் மூளையிலே ஏறவில்லை.

''நீ சொல்வது ஒன்றும் எனக்குப் புரியவில்லை'' என்றான் ரமணி.

''அதற்குமேல் விளங்க வைக்க என்னால் முடியாது. உன் களிமண் மண்டையில் எதுதான் ஏறும்? பூமி சுற்றுகிறது என்றால் சுற்றுகிறதுதான்'' என்றேன் எரிச்சலுடன்.

ரமணி ஏமாற்றத்துடன் போய் விட்டான்.

மறு நாள் காலை ரமணி என்னிடம் வந்து, ''அண்ணா, பூமி சுற்றுகிறது என்பதை நான் புரிந்து கொண்டுவிட்டேன். எப்படித் தெரியுமா? நான் நேற்று ராத்திரி படுக்கும்போது ஜன்னல் பக்கம் தலையும் அலமாரிப் பக்கம் காலும் வைத்துப் படுத்துக்கொண்டேன். ஆனால் காலையில் எழுந்திருக்கும் போது ஜன்னல் பக்கம் கால் இருந்தது; அலமாரிப் பக்கம் தலை இருந்தது! அதனால்தான்'' என்றான்.

எனக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. என்றாலும் அடக்கிக் கொண்டு, இந்த மட்டுமாவது ஒப்புக்கொண்டானே என்று நிம்மதியடைந்தேன்.

ஆனால்..ரமணி சற்று நிதானித்து, ''அது சரி அண்ணா, நான் தலைக்கு வைத்துக்கொண்டிருந்த தலையணை மட்டும் அதே இடத்திலேயே இருந்ததே! பூமி சுற்றினால் அதுவும் இடம் மாறவேண்டாமா?'' என்றான். நான் விழித்தேன்!

—சுவா. சுப்பிரமணியன்.

# சர்க்கரைப் பொங்கல்

**விஜயா**

"அடேயப்பா, இந்தச் சர்க்கரைப் பொங்கல் ருசியே தனி. எனக்கு இது ரொம்பப் பிடிக்கும். அதையேதான் இன்னிக்கு அம்மாவைப் பண்ணச் சொன்னேன்.'' என்ருள் பாபு பெருமையுடன்.

''நாக்கைத் திட்டிண்டு திங்கறியே, அது எப்படிப் பண்ற துன்னு உனக்குத் தெரியுமா?'' என்ருன் குமார்.

''போடா, இதென்ன பிரமாதம்! கடையிலே சாமான் வாங்கி வீட்டில் வந்து பண்ணவேண்டியது தானே?'' என்ருள் பாபு.

''போடீ மண்டு, நான் அதைச் சொல்லலே. சரி போகட்டும். பொங்கல் என்னமோ ருசியாகத் தான் இருக்கு; அதை முதல் முதல்லே கண்டு பிடிச்சது யாருன்னுதான் தெரியல்லே!'' என்று தன் சந்தேகத்தைத் தெரிவித்தான் குமார்.

''ஆமாண்டா யாருன்னுதான் தெரியலே எனக்கும்'' என்று ஒத்துப் பாடினுள் பாபு.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த அவர்கள் தாய், ''யாரா? உன்னைப்போல ஒரு பெண்தான். உனக்கு இப்போ ஆகற வயசு தான் அந்தப் பெண்ணுக்கும். அவள்தான் இதைக் கண்டு பிடிச்சா'' என்ருள் சிரித்துக் கொண்டே.



"யாரு, என்னைப்போல ஒரு பெண்ணு? நிஜமாவா?" என்றுள் பாபு ஆச்சரியத்துடன்.

"ஆமாம்மா, உனக்குத் தெரியாதா அது? சொல்றேன் கேளு. இது நடந்து ரொம்ப ரொம்ப வருஷம் ஆயிடுத்து. இருந்தாலும் உனக்காகச் சொல்றேன்" என்று கதையை ஆரம்பித்தாள்.

வெகு காலத்துக்கு முன்னல்:

சாரு அவசர அவசரமாகக் கடைக்கு ஓடினுள். அவளுடைய சித்தி உத்தரவிட்டபடி சாமான் பட்டியலை எழுதி எடுத்துக் கொண்டு கடைக்குள் நுழைந்தாள்.

கடைக்காரனும் பட்டியலில் போட்டிருந்தபடி வெல்லம், அரிசி, பயத்தம்பருப்பு, கடலைப் பருப்பு எல்லாம் கட்டி ஒரு பெரிய பையில் போட்டுக் கொடுத்தான். அவைகளைத் தூக்க மாட்டாமல் தூக்கிக் கொண்டு நடந்தாள் சிறுமி சாரு. அவள் நினைவோ எங்கேயோ இருந்தது.

சாரு பிறந்த ஒரு வருஷத்தில் அவள் தாய் இறந்தாள். அதன் பிறகு அவள் தந்தை மறு விவாகம் செய்து கொண்டார், சித்தியாக வந்தவள் மகா கோபக்காரி. சாருவிடம் எரிந்து எரிந்து விழுவாள். நினைவு தெரிந்தது முதல் சாருவுக்கு அவள் வேலைகளை ஏவிக் கொண்டுதான் இருந்தாள். இப்போது பத்து வயதில் சாரு வீட்டு வேலை முழுதும் செய்ய வேண்டியிருந்தது. அவளும் வாய் திறவாமல்தான் எல்லா வேலைகளையும் செய்து வந்தாள்.

இப்படியாக எண்ணிக்கொண்டு போன சாருவுக்குச் சட்டென்று போன வருஷச் சம்பவம் ஒன்று நினைவுக்கு வந்தது. அன்றும் இது போல் தை முதல் தேதிதான். அன்று அவள் சித்தி அவளைச் சாமான் வாங்கி வர அனுப்பினுள். சாருவுக்குச் சாமான் வாங்கி வந்து அதற்குமேல் சமைத்துப் போடச் சற்று நேரமாகி விட்டது. அப்பப்பா; அதற்காக அன்று அவள் வாங்கிய அடியும் உதையும் அவள் உடம்பில் இன்றும்கூடத் தழும்பு ஏறியிருந்தது.

இதையெல்லாம் நினைத்துக் கொண்ட மாத்திரத்தில் சாருவுக்குப் பயம் வந்துவிட்டது. எங்கே அன்று போல் இன்றும் ஆகிவிடுமோ என்று பயந்து வேகமாக நடக்க ஆரம்பித்தாள்.

அவள் நடந்த வேகத்தில் எதிரே இருந்த கருங்கல்லைக்கூடப் பார்க்காமல் தடுக்கிக் குப்புற விழுந்தாள். சாமான்களெல்லாம் பொட்டலங்கள் அவிழ்ந்து சிதறி ஒன்றோடொன்று கலந்து போயின.

சாருவுக்கு ஒன்றுமே செய்யத் தோன்றவில்லை.

"ஐயோ, இப்போ என்ன செய்யட்டும்? வீட்டுக்கு இப்படியே சாமானை வாரி எடுத்துக்கொண்டு போனுல் சித்தி உயிரையே எடுத்துவிடுவாளே. இதையெல்லாம் வெவ்வேருகவும் பிரிக்க முடியாதே! அப்பப்பா, என்ன வெயில் கொளுத்துகிறது! ஐயோ, அந்த வெல்லமெல்லாம் வெயிலிலே பாகாய் உருகுகிறதே; நான் என்ன செய்ய? பகவானே, நீதான் காப்பாத்தணும்" என்று சுவாமியைப் பிரார்த்தித்துக் கொண்டாள்.

நேரம் ஆகிவிட்டது. இனி என்ன செய்வது? விதி விட்ட வழிதான் என்று எல்லாவற்றையும் திரட்டி எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போனுள். அவள் மார்பு 'பக், பக்' என்று அடித்துக்கொள்ள, வீட்டை அடைந்தாள் சாரு. ஆனுல் வீட்டில் சந்தடியே இல்லை. அடுத்த வீட்டுப் பையன் ஓடிவந்து, "சாரு உன் அப்பாவும் சித்தியும் கோயிலுக்குப் போனுர்கள். அவர்கள் வரத்துக்குள்ளே உன்னை எல்லாம் சமைத்து வைக்கச் சொன்னு" என்றுன்.

"அப்பாடி, சித்தி நல்லவேளையா இல்லை" என்று நிம்மதியாக ஒரு பெருமூச்சு விட்டுக்கொண்டே உள்ளே சென்றுள் சாரு.

உள்ளே, காலையில் வாங்கிய பால் இன்னும் காய்ச்சாமல் அப்படியே இருந்தது. உடனே சாரு வெண்கலப் பானையை அடுப்பில் வைத்துப் பாலை அதில் விட்டாள்.

பிறகு தான் வாங்கிவந்த சாமான்களை எடுத்துப் பார்த்தாள். அதை என்ன செய்வதென்றே

தோன்றவில்லை, பேசாமல் எல்லாவற்றையும் ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்தாள்.

வீட்டில் கடைந்தெடுத்த வெண்ணெயை உருக்கி வைத்தாள். இதற்குள் வாசலில் ஏதோ சத்தம் கேட்பது போலிருந்தது. "ஐயோ, வந்துட்டாப் போல இருக்கே சித்தி. என்ன செய்வது? சாதம் வடிக்க அரிசியை எப்படித் தனியாகப் பொறுக்கி எடுக்க முடியும்? கடவுளே நீதான் காப்பாத்தணும்" என்று வேண்டினாள். ஏதேனும் ஒன்று செய்து தானே ஆகவேண்டும்? சித்தி வருவதற்குள் அதைச் செய்து முடிக்கவும் வேண்டும். பயத்தில் என்ன செய்கிறோம் என்று தெரியாமல் சாமானையெல்லாம் வெண்கலப் பானையில் போட்டுவிட்டாள். பிறகு தான், "ஐயையோ, பாலில் போட்டேனே" என்று பரிதவித்தாள். அவளுக்கு ஒன்றுமே ஓடவில்லை. வாசலில் சத்தம் கேட்டும் இன்னும் யாரும் வராதது கண்டு எட்டிப் பார்த்தாள். காற்றில் கதவு அடித்துக்கொண்ட சப்தம் தான் அது என்று தெரிந்ததும் கொஞ்சம் நிம்மதி அடைந்தாள்.



நேராகச் சுவாமி அறைக்குப் போனாள். மண்டியிட்டுக்கொண்டு, "பகவானே, நான் என்ன தப்புச் செய்தாலும் நீதான் பொறுத்துக்கவேணும். இப்போ என் சித்தி வந்தால் நான் செய்த காரியத்துக்கு என் தோலை உரித்து விடுவாளே!" என்று வேண்டிக்கொண்டாள்.

அப்போது சமயலறையிலிருந்து, ஏதோ நல்ல வாசனை வந்தது. சாரு ஓடிப்போய் அடுப்பைப் பார்த்தாள். வெண்கலப்பானையில் அவள் போட்ட சாமான்கள் பதமாக வெந்து, மணத்துடன் வீசியது. அதை இறக்கிக் கீழே வைத்தாள். வாசலில் பேச்சுக் குரலும் கேட்டது.

சித்தியும் தந்தையும் உள்ளே வருவதைப் பார்த்த சாருவுக்கு அவர்கள் என்ன திட்டுவார்களோ என்றே நடுக்கமாக இருந்தது.

அவள் தத்தை கைகால் சுத்தம் செய்துகொண்டு வீட்டுப் பூஜைக்கு உட்கார்ந்தார்.

"எல்லாம் செய்து வைத்தாச்சா?" என்று அதட்டியவாறே உள்ளே வந்தாள் சாருவின் சித்தி. சாருவுக்குப் பதில் சொல்லவே தோன்றவில்லை. குரல் உள்ளேயே அழுந்தியது.

இதற்குள் அவள் தந்தை, "சாரு நைவேத்தியம் கொண்டு வா" என்றார்.

வாய் திறவாமல் வெண்கலப் பானையைச் சுவாமி உள்ளுக்குக் கொண்டுபோனாள் சாரு.

அதிலிருந்ததைப் பார்த்த அவள் தந்தை, "என்ன இது, ஒரே கறுப்பா இருக்கே. இது சாதமா? வரவர உனக்குச் சாதம்கூட வடிக்கத் தெரியாமலா போயிடுத்து?" என்று அதட்டினார்.

"இல்லேப்பா வந்து. . ." என்று மென்று விழுங்கினாள் சாரு.

"என்னடீ இது! வீட்டை விட்டு நான் ஒரு நிமிஷம் அந்தண்டை போனால் இவ்வளவு அமர்க்களம்? சாதம் வடிக்கத் தெரியாது? சாமான் எல்லாம் வாங்கி வந்தாயா? எல்லாம் சரியா



**தலைமை ஆசிரியர்:** ஏண்டா, நீ ஏழைப்பையன்னு சிபாரிசுக் கடிதம் வாங்கி வந்திருக்கியே, அவர் ரொம்ப நாளைக்கு முன்னாடியே இறந்து போயிட்டாரே?

**பையன்:** அதனாலென்ன ஸார்! ரொம்ப நாளைக்கு முன்னாலேயே நாங்க அவராலேதான் ஸார், ஏழையாப் போனோம்.

—எஸ். எஸ்.

---

எடுத்து வச்சயா?'' என்று உறுமினாள் சித்தி.

இதன் நடுவில் சாருவின் தகப்பனார் பூஜையை முடித்துக்கொண்டு இலை போடச் சொன்னார்.

''எதை வைத்துக் கொண்டு சாப்பிட? இது என்ன விஷம் கலந்த சோறு?'' என்று அதட்டினாள் சித்தி.

ஆனால் நல்ல மணம் வீசுவதைக் கண்டு, ''ஏதோ ஒண்ணு போட்டுத் தொலை'' என்றார் அவள் தந்தை.

சாரு பயந்துகொண்டே பரிமாறினாள். தான் செய்த அன்னத்தை இலையில் வைத்து நெய் வார்த்தாள். வேண்டா வெறுப்புடன் அவர் ஒரு வாய் எடுத்துப் போட்டுக் கொண்டார். அவர் கண்கள் அகல விரிந்தன; நாக்கில் ஜலம் ஊறியது!

புத்துருக்கு நெய்யுடன் செய்த அன்னத்தைக் கலந்து சாப்பிட்ட அவர் மேன்மேலும் சாப்பிட்டார். ''சாரு, எப்படியம்மா இதைச்செய்தாய்? ஆஹா, ரொம்ப ருசியாயிருக்கே'' என்று இன்னும் இரு முறை அன்னம் போட்டுக்கொண்டார்.

''போறுமே, பெண் பண்ணின அழகோ, நீங்க ஆவறி ஆவறின்னு சாப்பிடற அழகோ!'' என்று சலித்துக் கொண்டாள் சாருவின் சித்தி.

''இல்லை, நீதான் ஒரு வாய் போட்டுப் பாரேன். அப்புறம் சொல்லுவே'' என்றார் அவர்.

பிறகு அவளும் கணவன் சொல்வதற்காக அந்த அன்னத்தை ஒரு வாய் சாப்பிட்டாள். ருசியைக் கண்டு திகைத்து விட்டாள்.


''ஏம்மா, இதுவரை வெண் பொங்கல்தான் செய்து பார்த்திருக்கோம். இது நல்ல தித்திப்புப் பொங்கலா இருக்கே! கூடவே புத்துருக்கு நெய்யும் போட்டுட்டா பிரம்மானந்தமா இருக்கே!'' என்றாள் சந்தோஷத்துடன்.

சாரு அன்று நடந்த சம்பவங்கள் பூராவும் சொன்னாள். அவள் தந்தையும் சித்தியும், ''ஐயோ பாவம், குழந்தை நமக்காகப் பயந்து ஓடி வந்திருக்கு. ஆனால் அதுவும் நல்லதாப் போச்சே. இப்போ புது விதப் பொங்கல் அல்லவா செய்துவிட்டாள்!'' என்று பெருமை கொண்டார்கள்.

பிறகு ஊரிலுள்ளவர்கள் சர்க்கரைப் பொங்கல் செய்வது பற்றிச் சாருவைக் கேட்டுப்போகக் கூட்டம் கூட்டமாக அவள் வீட்டுக்கு வந்தனர். சாருவின் பெயர் எங்கும் பரவியது.

அதிலிருந்து எல்லோரும் பொங்கலன்று சர்க்கரைப் பொங்கல் செய்து சாமிக்கு நைவேத்தியம் செய்து, தாங்களும் சாப்பிட்டுச் சந்தோஷப் பட்டார்கள்.

அம்மா சொன்ன இந்தக் கதையைக் கேட்டு, பாபுவும் குமாரும் சாருவை வாழ்த்தியபடியே சர்க்கரைப் பொங்கலை ருசியுடன் உண்டார்கள்.




நாகராஜன் கும்பகோணத்தில் காவேரிக்கரைத் தெரு வழியே சென்றுகொண் டிருந்தான். அங்கே ஒரு வீட்டில் தெருவை அடைத்துப் பெரிய கல்யாணப் பந்தல் போட்டிருந்தார்கள். பந்தலில் விளக்கு அலங்காரத்திற்கான மின்சார ஏற்பாடுகளும், வாழை மரம், தோரணங்கள், தென்னங்குலை முதலியவைகளைக் கட்டிக் கொண்டும் இருந்தார்கள் வேலையாட்கள். பந்தலின் மத்தியில் ஒருவர் நின்று கொண்டு - ஆம், அவர்தான் கல்யாண வீட்டுக்காரர் - ''அதை அப்படிச் செய்; இதை இப்படிக் கட்டு'' என்று ஆட்களை வேலை வாங்கிக்கொண் டிருந்தார்.

எதிர் வீட்டுக்காரர், ''சம்பந்தி எந்த வண்டியில் வருகிறார்களாம்?'' என்று அவரைக் கேட்டார். ''மாலை நாலுமணிக்குத் திருச்சியிலிருந்து வரும் வண்டியில்தான் வருகிறார்கள்'' என்றார் அவர். இதைக் கேட்டுக் கொண்டே சென்ற நாகராஜன் உடனே ஏதோ திட்டமிட்டு விட்டான்.

சம்பந்திகளை அழைத்து வர ஸ்பெஷலாக டவுன்பஸ்கள் மூன்றும் மாப்பிள்ளை போன்ற முக்கியமானவர்களை அழைத்துவர கார்களும் ஸ்டேஷனுக்கு அனுப்பப்பட்டன.

இரண்டு பக்கங்களிலிருந்தும் வந்த ரெயில்கள் ஸ்டேஷனை அடைந்தன. நாகராஜனும் காரில் மாப்பிள்ளைத் தோழர்களுடன் சம்பந்தி ஜாகையை

அடைந்தான். எல்லோருடனும் சகஜமாகப் பழக்கமுள்ளவனைப் போலப் பழகினான். கோவில் மண்டபத்திலிருந்து ஊர்வலமாக மாப்பிள்ளையை அழைத்து வரும்போது தன்னை ஒருவர் அடிக்கடி உற்றுக் கவனிப்பதைக் கண்டான். அந்த முகத்தைக் காணும்போதெல்லாம் மனத்தில் ஓர் அச்சம். அவர் குரலும் தனக்குப் பழக்கப் பட்டதாகத் தெரிந்தது. முகமும் அப்படித்தான். அவர் சில சமயங்களில் அவனை நெருங்கும்போதெல்லாம் ஒதுங்கியே சென்றான். அவர் மாப்பிள்ளைக்கு நெருங்கிய நண்பர் என்றும் அவர் பெயர் தியாகராஜன் என்றும் உணர்ந்தான்.

இரவு சாப்பாடு முடிந்தது. மணி பதினொன்று அடித்தது. தியாகராஜன் வந்த அலுப்பினாலோ என்னவோ படுக்கையை எடுத்துக்கொண்டு மொட்டை மாடிக்குச் சென்றான். மாடியில் ஓர் அறையில் மாப்பிள்ளை, தனக்கு மாப்பிள்ளை அழைப்பின்போது அளித்த தங்கச் செயினுடன் கூடிய வாட்சையும், வைரக்கல் பதித்த மோதிரத்தையும் தன் தாயாரிடமும் மற்ற இருவர்களிடமும் காண்பித்துக்கொண்டிருந்தான். பிறகு தாயார் தன் கழுத்தில் அணிந்திருந்த காசுமாலையைக் கழற்றிப் பிள்ளையின் கையில் கொடுத்து எல்லாவற்றையும் பெட்டியில் வைத்துப் பூட்டும்படி சொன்னாள். அறையின் வெளிப்புறத்தில் வந்து படுத்துக்கொண்டிருந்த நாகராஜன் அந்தப் பெட்டியின் அடையாளத்தை மட்டும் பாதி மூடியிருந்த ஜன்னலின் வழியாகப் பார்த்துக் கொண்டான். பிறகு எல்லோரும் படுக்கைக்குச் சென்றனர்.

விடியற்காலையில் முகூர்த்தமாகையால் அனைவரும் நாலு மணிக்கே எழுந்து விட்டனர். மாப்பிள்ளை புது வேஷ்டியை உடுத்துக்கொண்டு ரிஸ்ட் வாட்சை எடுக்க அறைக்குச் சென்றான். இரவு பெட்டியைப் பூட்டியது நன்றாக ஞாபகம் இருந்தது. பூட்டைக் காணாததால் திடுக்கிட்டான். பிறகு ஒருவாறு சமாளித்து, திறந்து பார்த்தான். நகைகளைக் காணவில்லை. தலை 'கிர் ர் ர்' என்று சுற்றியது. கல்யாண வீடு அமர்க்களப் பட்டது.

தியாகராஜன் எழுந்தான். இந்தத் திருட்டைக் கேட்டதும் திடுக்கிட்டான். ஆனால் ஓர் எண்ணம் அவன் மனத்தை வாட்டிப் பிழிந்தது. அவன் முதல் நாள் கவனித்த அந்த இளைஞனைக் காணவில்லை. அவன் யார்? அவன் பெயர் என்ன? யாருக்கும் தெரியவில்லை. உடனே போலீசுக்குத் தகவல் கொடுக்கப் பட்டது. சப்இன்ஸ்பெக்டர் நாலு கான்ஸ்டபிள்கள் சகிதம் வந்து இறங்கினார். இன்ஸ்பெக்டர் உள்ளே வந்ததும், "ஹலோ மிஸ்டர் தியாகராஜன். நீங்கள் இருக்கும்போதா இந்த வீட்டில் திருட்டு நடந்தது?" என்று கேட்டார். ஆம்; தியாகராஜன் போலீஸ் துப்பறியும் இலாகாவில்தான் உத்தியோகம் பார்த்து வருகிறான். இன்ஸ்பெக்டருக்குத் தியாகராஜனை முன்னமேயே தெரியும். அதனால்தான் அப்படிக் கேட்டார். பிறகு இன்ஸ்பெக்டர் அந்த இளைஞனின் அடையாளத்தைப்பற்றி விசாரித்தார். மாப்பிள்ளையின் தங்கை லீலா குறுக்கிட்டு, "அவன் ஏறக்குறைய - ஏன் அப்படியே என்றுகூடச் சொல்லிவிடலாம் - நம் தியாகராஜனைப் போல்தான் இருப்பான். நேற்று இரவு கூட அவனை இவர் என்று நினைத்துக் கூப்பிட்டுவிட்டு ஏமாந்து போனேன்" என்றாள். இன்ஸ்பெக்டர் புலன் விசாரிப்பதாகச் சொல்லிக் குறித்துக் கொண்டு போய்விட்டார். லீலாவின் வார்த்தைகள் தியாகராஜனின் சந்தேகத்தை ஊர்ஜிதப் படுத்தியது. மேலும் அவனது நொந்த உள்ளத்தைப் புண்படுத்தியது. அவனது மனத்திரையில் திரைப்படம் போல் ஒரு காட்சி ஓடியது.

தியாகராஜனுக்கு அப்போது ஏழு வயது. தந்தை இறந்து விட்டார். அவனுக்கு ராஜு என்ற ஒரு தம்பி உண்டு. தியாகராஜனின் தாய் தன் இரு குழந்தை

களையும் அழைத்துக்கொண்டு தம்பி வீட்டுக்குச் சென்று அங்கேயே வசித்து வந்தாள். ராஜு மிகவும் துஷ்டன். அவனைக் கண்டாலே அந்தத் தெருவிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் பயம். அவன் எந்த வீட்டில் நுழைந்தாலும் அங்கே ஏதாவது ஒரு பொருள் காணுமல் போகாமல் இராது. அதற்குக் காரணம் அவனுகத்தான் இருப்பான். அவனுடைய மாமாவுக்குப் பொழுது விடிந்தால் ஊர்ப் புகார்களை விசாரிக்கத்தான் நேரம் சரியாக இருக்கும். இதனுல் அவனைக் கண்டாலே வெறுக்கத் தொடங்கினுர்.

ஒரு நாள் பக்கத்து வீட்டில் கல்யாணம் நடந்து கொண் டிருந்தது. ராஜு அந்த வீட்டுக்குள் சென்று ஒரு சுற்றுச் சுற்றிக் கொண்டு வாசலுக்கு வந்தான். இவனைக் கண்டதும் அந்த வீட்டுக்காரர், "இவன் எங்கே வந்தான்? திருட்டுப் பயல்! டேய்! இனி நீ இங்கே வந்தால் உன் காலை முறித்து விடுவேன். ஜாக்கிரதை!" என்று 'நறுக்'கென்று தலையில் பல்லைக் கடித்துக்கொண்டு ஒரு குட்டுக் குட்டி, பந்தலுக்கு வெளியே இழுத்து வந்து தள்ளி விட்டுப் போனுர். தியாகராஜனும் அப்போது பந்தலில்தான் நின்று கொண் டிருந்தான். இதைக் காணும்போது அவன் மனம் துடியாகத் துடித்தது. அங்கே யிருக்க மனம் பிடிக்காமல் வெளியே





**ராமு:** ஏண்டா சோமு! உங்க அப்பா இப்பல்லாம் இரண்டு மாசமா ரொம்ப குஷியா இருக்காரே! என்ன விசேஷம்?

**சோமு:** என்ன விசேஷம், எங்க அம்மா ஊரிலே இல்லே. அதுதான்!

---

வந்தான். வீட்டுக்காரர் அவனைப் பார்த்து, ''நீ எங்கேடா போகிருய்? நீ உள்ளே போ'' என்று ரொம்பவும் அன்பாகத்தான் சொல்லிவிட்டுப் போனுர். ஆனுல் தியாகராஜன் வீட்டுக்கு வந்துவிட்டான். அவர் தன் தம்பியைக் குட்டியதை நினைத்தால் இப்போதுகூடத் தியாகராஜனுக்குக் கண்ணில் ஜலம் வருவது போலிருந்தது. ஆனுல் ராஜு அதற்காகக் கொஞ்சம்கூட கலங்கவில்லே. அதற்கு மாருகக் கூடத்து அலமாரியின் கீழ் நின்றுகொண்டு பேந்தப் பேந்தத் திரும்பித் திரும்பி விழித்தபடியே நின்ருன். சிறிது நேரத்தில் கல்யாண வீட்டுக்காரரர் மற்ெெருருவருடன் வேகம் வேகமாக முகம் சிவக்க, உதடு துடி துடிக்க, வீட்டினுள் நுழைந்தார். ''ராஜு எங்கே? எங்கே அந்தப் பயல்?'' என்று அவரே வீடு பூராவும் தேடிப் பார்த்தார். பிறகு வெளியில் சென்றிருந்த அவன் மாமாவும் அங்கே வந்துவிட்டார். கடைசியில் ராஜு தோட்டத்தில் அவரைக் குழியின் கீழ் மண்ணைத் தோண்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அவர்கள் மாமா அவனைப் பிடித்து இழுத்து, 'பளீர், பளீர்' என்று கன்னத்தில் நான்கு அறைகள் கொடுத்தார். ஆனுல் ராஜு சொட்டுக் கண்ணீர்கூட விடவில்லே. உண்மையையும் கூறவில்லே. விசாரித்ததில் புதிதாக வந்தவருடைய குழந்தையின் கையில் மோதிரத்தைக் காணவில்லேயாம். அவரைக் குழியைக் கிளறிப் பார்த்தனர். அங்கேயும் மோதிரத்தைக் காணேம். புதிதாக வந்தவர் ஜெயில் ஸ்கூல் சூப்பரின்டென்டாம், அவர்தான் அந்த மோதிரத்திற்குரியவர். அவர் கூட முடிந்தவரை மிரட்டிப் பார்த்தார். கொஞ்சம் கூட அவன் பயப்படவில்லே. தியாகராஜனுக்குச் 'சட்' என்று ஒரு ஞாபகம். கூடத்து அலமாரியைத் திறந்து அங்கே தேடினுன். முகப் பவுடர் டப்பாவில் இருந்தது அந்த மோதிரம். அதை எடுத்து அவர்களிடமே கொடுத்துவிட்டான். இனி ராஜுவை வீட்டில் வைத்திருந்தால் ஆபத்து என்று எண்ணினுர் அவனுடைய மாமா. அந்தப் புதிய மனிதர் சூப்பரின்டென்ட் உதவியால் அவனே உடனே ஜெயில் ஸ்கூலில் சேர்த்துவிட்டார்.

இரண்டு மாதங்களுக்குப் பின் தாயின் விருப்பப்படி அந்த ஸ்கூலில் தியாகராஜன் சென்று பார்த்தான். கொழு கொழு என்று இருந்த தன் தம்பியை அவனுல் அடையாளமே கண்டு கொள்ள முடியவில்லே. அவன் துரும்பைப் போல் இளேத்திருந்தான். ஆனுல் குணத்தில் சற்றேனும் மாருதவில்லே. தியாகராஜன் உண்மையான அக்கறையுடன், ''இங்கே எப்படி இருக்கிறது?'' என்று விசாரித்தான். அதைக் கேட்டதும் ராஜு, ''நீ என்னேக் காட்டிக் கொடுத்ததால்தான் எனக்கு இந்தக் கதி வந்தது! இப்போது வந்து உருகுகிருயோ!'' என்று 'பளீர்' என்று அவன் கன்னத்தில் பேய் அறைவது போல் ஓர் அறை

கொடுத்தான். அவன் கன்னம் உடனே வீங்கிவிட்டது. அத்துடன் அன்று இரவே கிளம்பி வீட்டுக்கு வந்து விட்டான் தியாகராஜன். பிறகு இரண்டொரு மாதங்களுக்குப் பின் ராஜு அங்கிருந்தும் தப்பி ஓடி விட்டான் என்று தெரிய வந்தது. அதன் பிறகு வருடங்கள் இருபது உருண்டு ஓடி விட்டன.

* * *

"என்ன, திருட்டைக் கண்டு பிடிக்க ஆழ்ந்த சிந்தனையில் இறங்கி விட்டாயோ? துப்புக் கிடைத்து விட்டதா?" என்று நண்பன் ஒருவன் தியாகராஜனின் தோளில் கையை வைத்து ஓர் உலுக்கு உலுக்கினான். சிந்தனை கலைந்த தியாகராஜன் அவனுடன் பேசிக்கொண்டே கல்யாண வீட்டிற்குச் சென்றான். பகல் போஜனமும் முடிந்தது. நகைகள் திருட்டுப் போனதால் கல்யாண வீட்டார் ஒவ்வொருவர் முகத்திலும் ஏதோ சோர்வு காணப்பட்டது. இந்நிலையில் நகைகளை இழந்த மாப்பிள்ளையையும் அவன் தாயாரைப் பற்றியும் கேட்க வேண்டுமா? தியாகராஜனுக்கோ அவசரமாக அன்று பகல் 12½ மணி வண்டியில் கிளம்பி திருச்சியில் நடக்கும் மற்றொரு கல்யாணத்திற்குப் போக வேண்டும். மாப்பிள்ளைக்குத் தேறுதல் கூறி அவனிடம் விடை பெற்றுக்கொண்டு கிளம்புவதற்குள் அங்கேயே மணி பன்னிரண்டே கால் ஆகிவிட்டது. உடனே ஸ்டேஷனுக்குச் சென்று டிக்கெட்டை வாங்கிக்கொண்டு திரும்பினான். ஆனால் மேல் அங்கவஸ்திரம் கூட்டத்தில் சிக்கிக் கொள்ளவே அதை விடுவித்துக் கொள்ள எண்ணி, திரும்பிய அவன் முகம் உடனே துணுக்குற்றது. பிளேடின் உதவியால் சில்க் ஜிப்பாவின் ஜேபியைக் கத்தரித்துக் கொண்டிருந்த அந்தக் கையை இரும்புப் பிடியாகப் பிடித்தான். உடனே 'பிக்பாக்கட்' என்ற சப்தம். பக்கத்திலிருந்த அனைவரும் அவனைப் பிடித்துக் கொண்டனர். அவன் முகத்தைப் பார்த்ததும் தியாகராஜனின் பிடி தளர்ந்தது. ஆம், அவன் கல்யாணத்தில் கண்ட அதே முகம்தான். நாகராஜன்தான். இதற்குள் கூட்டம் கூடிவிட்டது. போலீஸாரும் வந்து விட்டார்கள். தியாகராஜனை ஒரு சாட்சியாக எழுதிக் கொண்டு திருடனைக் கைது செய்து ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றனர்.

வழக்கு விசாரணைக்கு வந்தது. நாகராஜன் கூண்டில் ஏறி நின்றான். தியாகராஜன் சாட்சியம் சொல்ல வந்திருந்தான். நீதிபதியின் முன்பு தியாகராஜனுக்குப் பேச நாவே எழவில்லை. ஒருபுறம் சகோதர பாசமும் மறுபுறம் நீதியும் அவனைப் பயமுறுத்தின. ஆனால் நடந்தவற்றை மறைத்துக் கூற முடியுமா? உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டியிருந்தது. உடனே தீர்ப்புக் கூறிவிட்டார்கள். ரூ. 100 அபராதம் அல்லது ஆறு மாதம் கடுங்காவல் தண்டனை. நாகராஜனின் தலை 'கிர்ர்ர்' என்று சுற்றியது. ஜவான்கள் அவனைப் போலீஸ் வானில் ஏற்றினார்கள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் அதே ஜவான்கள், "நாகராஜன், நீ விடுதலை செய்யப் பட்டு விட்டாய்" என்றனர். நாகராஜன் தன் காதுகளையே நம்பவில்லை. "விடுதலையா? எப்படி?"

"அபராதம் செலுத்தப்பட்டு விட்டது."

"யார் செலுத்தியது?.."

நாகராஜன் வெளியே வந்தான். தியாகராஜன், "ராஜு, நான்தான் உன் அண்ணன் தியாகு!" என்று சொல்லும்போதே உணர்ச்சி வசப்பட்டு "அண்ணா" என்று அன்புறத் தழுவிக் கொண்டான். சிறிது நேரம் அமைதி. "அண்ணா, நீதான் எனக்குத் தெய்வம். இனி மேல் உன் சொல்படி நடப்பேன்; என்னை ஏற்றுக் கொள்வாயா?" என்று கதறினான் நாகராஜன். தியாகராஜனின் கண்களில் அன்புக் கண்ணீர் பெருகியது. "நீ சொல்வது உண்மையானால் கல்யாண வீட்டில் எடுத்த பொருளை நீ எங்கே ஒளித்து வைத்திருந்தாலும் அவற்றை இன்றே திருப்பிக் கொடுத்துவிட்டு வரவேண்டும்" என்றான்.



# பாலர் கவி அரங்கம்

## மகிழ்ந்து ஆடுவது எப்படி?

ஆற்றில் தண்ணீர் வற்றியது
ஆனந்தமாய் விளையாடிட்டோம்
சேறும் வெயிலில் காய்ந்திடவே
சிறு பரல் மணலாய் ஆனதுவே.

மனோகர மாலை வேளையிலே
மகிழ்ந்து நாம் விளையாடிட்டோம்
இனிப்பான பல பண்டங்கள்
இன்பமா யங்கே தின்றிட்டோம்.

ஊற்றுகள் நாமும் தோண்டிட்டோம்
ஊறும் தண்ணீர் பார்த்திட்டோம்
பொறிகள் பலவும் வைத்திட்டோம்
பலரையும் அதிலே வீழ்த்திட்டோம்;

தேனின் மிக்க இனிப்பான
தெளிந்து ஓடும் நீரதனை
ஆனந்தமாய் நாம் குடித்திட்டோம்
ஆசை போல் விளையாடிட்டோம்;

பாடப் புத்தகம் தனை மறந்து
பாடல் பாடி மகிழ்ந்திட்டோம்
சடுகுடுவும் விளை யாடிட்டோம்
சர்க்கஸ் வேலை செய்திட்டோம்;

மணல் பரப்பைக் கிளறிட்டோம்
மண்களி நாமும் கண்டிட்டோம்
கண்ணைக் கவரும் பொம்மைகள்
களிமண் ணாலே செய்திட்டோம்.

மலையிலிருந்து நீர் வருது
மழையும் இப்போ பெய்ததனால்
மாலையி லினிமேல் அங்கேநாம்
மகிழ்ந்து ஆடுவ தெப்படியோ?

—ஆர். சரஸ்வதி, ஒழுகினசேரி.

# கேளுங்கள், சொல்கிறேன்

பேராசிரியர் விஞ்ஞானம்

**கே. சதாசிவன், மதுரை.**

ஒரு வாளியில் தண்ணீர் வைத்திருந்தால், அதன் ஓரங்களில் புள்ளி போன்றவை ஒட்டிக்கொண்டிருக்கின்றனவே, ஏன்? சிலவற்றில் காணோம், சிலவற்றில் பாதி தான் இருக்கிறது, ஏன்?

புள்ளிபோல் தோன்றுபவை வாயுக் குமிழிகள். வாளியில் தண்ணீரை வார்க்கும்போதோ, அல்லது தண்ணீரை மொள்ளும் போதோ நீருக்கு இடையே வாயு அகப்பட்டுக் கொள்ளுகிறது. அவை அங்கங்கே புள்ளிப் புள்ளியாக வாளியோரத்தில் ஒட்டிக் கொள்ளுகின்றன. இப்படி அவை ஓரத்தில் படிவதற்கு ஒரு வகையான கவர்ச்சியும், ஆதாரமுமே காரணம்.

நீரின் நடுவில் அகப்பட்ட வாயுக் குமிழிகள், வாயு நீரைவிட கனக்குறைவான பொருளாகிய படியால், நீரின் மட்டத்துக்கு வருகின்றன. அங்கே சில வேளைகளில் குமிழிகளாகப் படிகின்றன. சில வேளைகளில் வெடித்து வெளிப்பட்டு விடுகின்றன. வாளியின் உட்புறத்தைக் கையால் தடவினால், அந்த வாயுத் துளிகள் மறைந்து போகும்.

நீரை மொள்ளும் அல்லது வார்க்கும் முறைக்கு ஏற்றபடி வாயுக் குமிழிகள் குறைவாகவோ, அதிகமாகவோ ஓரங்களில் படிகின்றன; சில வேளைகளில் படிவதே இல்லை.

**என். ஆர். தம்பி.**

சிலருக்கு அறிவு நுட்பமாகவும் சிலருக்கு அறிவு மந்தமாகவும் உள்ளது, ஏன்?

பொதுவாகப் பார்க்கும்போது மக்கள் அனைவரும் சமம் என்று சொன்னாலும், மனிதனுக்கு மனிதன் எத்தனையோ வகைகளில் வித்தியாசப்படுகிறான். உயரம், பருமன், நிறம், உடலமைப்பு, செயல் திறமை, அறிவு, நினைவு, ஆரோக்கியம் போன்ற எத்தனையோ அம்சங்களில் ஆளுக்கு ஆள் வித்தியாசம் இருக்கிறது.

இதற்கு இரண்டு முக்கியமான காரணங்கள் கூறப்படுகின்றன: ஒன்று பிறவி (Heredity), மற்றொன்று சூழ்நிலை (Environment). பிறவி என்பது பரம்பரையால் வருவது. முகச்சாடை, உயரம் முதலியவை பிறவியால் உண்டானவை. அறிவும் பெரும் பான்மையும் அவ்வாறே. அறிவு நிரம்பிய குடும்பத்தில், அறிவுள்ள தாய் தந்தையருக்குப் பிறந்தவர்கள் அறிவுள்ளவர்களாக இருப்பார்கள்.

ஆனால், சூழ்நிலையும் இதற்கு ஒரு காரணம். சுற்றியுள்ளோரின் நடத்தை, செயல், உதவி, போதனை முதலியவற்றாலும் அறிவு பாதிக்கப்படுகிறது. அதைப் போலவே தன் முயற்சியும் ஒரு காரணம். பயிற்சியால் எத்தனையோ தடைகளைக் கடக்கலாம்; நினைவை மிகுதிப் படுத்தலாம்; கல்வியால் அறிவை வளர்க்கலாம்; துணைவர்களால் நற்புத்தி பெறலாம்.

பரம்பரை, சூழ்நிலை, பழக்க வழக்கங்கள் ஆகிய மூன்றும் அறிவின் வித்தியாசத்துக்குக் காரணங்கள்.

**ந. சுந்தரம், வளையாப்பட்டி.**

ஒருவனுக்குக் கோடைக் காலத்திலும், குளிர் காலத்திலும் அதிகத் தண்ணீர் தாகம் உண்டாகிறதே. இதற்கு என்ன செய்ய வேண்டும்?

கோடைக் காலத்தில் வியர்வையால் உடலிலிருந்து அதிக அளவில் நீர் வெளியேறுகிறது. ரத்தம் முதலியவற்றில் உள்ள நீர்ப் பகுதி இதனால் குறைகிறது. இந்தக்

குறைவு நிலை உடலுக்குச் சௌகரியமான நிலை அன்று. அதை உடலின் நரம்புகள் அற்புதமாக உணர்ந்து, மூளைக்கு அறிவிக்கின்றன. மூளை அந்த உணர்ச்சியைத் தாகம் என்னும் ஒரு விசேஷ நிலையாக அமைக்கிறது. அந்த உணர்ச்சியைப் பெற்றதும், நாம் தண்ணீரைத் தேடி அருந்துகிறோம். சிறிது நேரத்தில் உடலின் குறைபாடு நீங்கி விடுகிறது.

குளிர் காலத்தில் அதிகத் தண்ணீர்த் தாகம் உண்டாவதில்லை. நீ அப்பொழுதும் 'அதிகத் தாகம் தவிக்கிறது' என்று சொல்வது பலருக்கும் ஏற்படக்கூடிய அநுபவமாக இராது. குளிர் காலத்தில் நாம் அவ்வளவு நீரை அருந்துவதில்லை.

குளிர் நாடுகளில் வாழ்பவர்களின் உணவு பெரும்பாலும் நீர் அம்சம் இல்லாத முறையில் பக்குவம் செய்யப்படும். உஷ்ண நாடுகளில் ஒன்ருகிய நமது தமிழ் நாட்டில் வாழ்பவர்களின் உணவு பெரும்பான்மையும் நீர் அதிகம் உடையது. குழம்பு, ரசம், மோர் முதலியவைகளை நாம் பலரும் சாதாரணமாக உணவில் சேர்த்து உண்டு வருகிறோம். நாவுக்குச் சுவை அளிக்கும் இளநீர், நீர்மோர், எலுமிச்சம் பழச் சாறு முதலியவைகளை அருந்துவதும் உடலின் நீர்க் குறையை நீக்குவதற்காகத்தான்.

கோடைக்காலத்திலும் கூட, கோடைக்கானல் முதலிய குளிர்ச்சியான ஊர்களில் வசிக்கும்போது அவ்வளவு நீர் அருந்தும் அவசியம் இருப்பதில்லை.

ஆகையால், தாகம் ஏற்பட்டால் மிதமான குளிர்ச்சியை உடைய நீரை அருந்துவதே அதைப் போக்குவதற்கான எளிய முறை.

**ந. சுந்தரம், வளையாப்பட்டி.**

எங்கள் ஊருக்கு தி கிரேட் ஈஸ்டெர்ன் சர்க்கஸ் கம்பெனி ஒன்று வந்திருக்கிறது. அதைப் பார்த்த பிறகு என் மனம் என்னைச் சர்க்கஸில் சேரவேண்டும் என்று தூண்டுகிறது. இதற்கு என் பெற்ருேர்கள் சம்மதிக்கமாட்டார்கள். ஆகவே இதற்கு என்ன வழி?

சிறு வயதில் எத்தனையோ விஷயங்களில் மனம் ஈடுபடும். எத்தனையோ ஆசைகள் தோன்றும். ஆனுல் நம்மீது கருத்தும் அன்பும் உள்ளவர்களைக் கேட்டு, அவர்கள் எல்லா விஷயங்களையும் கவனித்துச் சொல்லும் முடிவை ஒப்புக்கொள்ளுவதுதான் சரி. அதுதான் கடமையும் புத்திசாலித்தனமும் ஆகும்.

கடைசியாக ஒன்று: நாம் ஆசைப்பட்டாலும் கிரேட் ஈஸ்டெர்ன் சர்க்கஸ் நம்மை ஒப்புக்கொள்ளுமா என்பது மற்ருெரு விஷயம்.

**பி.ஏ. முகமது உசேன், சென்னை.**

சித்திரங்களைப் பிளாக்கு எடுப்பது எவ்வாறு?

பழங் காலத்தில் சித்திரங்களுக்குப் பிளாக்கு எடுப்பதற்குச் சிறந்த ஓவியர்கள் வேண்டியிருந்தது. அவர்கள் சித்திரத்தைப் பார்த்து உலோகத்திலோ மரக் கட்டையிலோ 'என்கிரேவிங்' (engraving) என்று சொல்லப்படும் செதுக்கு அச்சுகளைச் செய்தார்கள். அவைகளிலிருந்து படங்கள் அச்சடிக்கப் பட்டன. இது மிகவும் சிரமமான வேலை; நாளாகும் வேலை; அதிகச் செலவும் ஆகும்.

இக்காலத்தில் படம் பிடிக்கும் முறையைத் துணை கொண்டு பிளாக்குகள் செய்யப்படுகின்றன.

பிளாக்குச் செய்ய வேண்டிய படமோ சித்திரமோ, பிளாக்கு இருக்க வேண்டிய அளவுக்குப் படம் பிடிக்கப்படுகிறது. தக்க மருந்து தடவிய ஈயத் தகட்டின் மீதோ, தாமிரத் தகட்டின் மீதோ இந்தப் படம் படியச் செய்யப் படுகிறது. மருந்தின் மீது ஒளி பட்ட இடம் இறுகிக் கட்டியாகிறது. அவைகளைத் தக்கபடி பாதுகாத்து, படத்தைச் சுற்றிலும், பின்புறத்திலும் வார்னிஷ் போன்ற பொருள் ஏதாவதொன்றைத் தடவுகிருர்கள். பின்பு, திராவகத் தொட்டியில் போடுகிருர்கள்.

வேண்டாத பகுதிகள் எல்லாம் திராவகத்தால் அரிப்புண்டு,

ஓரளவு கரைந்து போகின்றன: வேண்டிய பகுதி மட்டும் கரையாமல் தங்குகிறது.

பிறகு இந்தத் தகட்டை, வேண்டியவாறு, உலோகக் கட்டையின் மீதோ, மரக்கட்டையின் மீதோ பதிக்கிறார்கள். இந்த நிலையில் இது சாதாரணமாக அச்சுக் கோக்கும் அச்சின் உயரமாக இருக்கும். அச்சடிப்பதற்கு அச்சை உபயோகிப்பது போல், இதையும் ஓர் அச்சாக உபயோகிக்கிறார்கள்.

பிளாக்குகளில் முக்கியமாக இரண்டு வகை உண்டு. ஒன்றுக்கு லைன் (Line) என்று பெயர்; மற்றொன்றை ஆப்டோன் (Half—tone) என்று சொல்லுவார்கள். முதலாவது, கோட்டினால் வரையப்பட்ட படங்களுக்கு ஏற்றது. இரண்டாவது படம் பிடித்த படங்களுக்கு ஏற்றது. இதுதான் பிளாக்கு செய்வதின் அடிப்படைத் தத்துவம்.

**வி. வி. முத்துக்குமாரசாமி,**
**சென்னை.**

**ரெயில் நிற்கும்போது இரவில் பெட்டிகளில் எவ்வாறு மின்சாரம் வருகிறது?**

ஆட்கள் பிரயாணம் செய்யும் ஒவ்வொரு ரெயில் வண்டியிலும் (பெட்டியிலும்) தளத்துக்கு அடிப்புறத்தில், ஏதாவது ஒரு சௌகரியமான இடத்தில், சேம மின்சாரக் கலங்கள் (Storage cells) கொண்ட ஒரு மின்கல அடுக்கு, அல்லது பாட்டரி (Battrey) பொருத்தப்பட்டுள்ளது. இந்தக் கலங்களை அக்கியூமுலேட்டர் (Accumultaor) என்றும் சொல்வதுண்டு.

ரெயில் நிற்கும்போது இந்தக் கருவியிலிருந்து மின்சார விளக்குகளுக்கும், மின்சார விசிறிகளுக்கும் வேண்டிய மின்சாரம் கிடைக்கிறது. ஆகையால் நிற்கும்போதும் விளக்குகள் பிரகாசிக்கின்றன, விசிறிகள் சுழல்கின்றன.

ஆனால், ரெயில் ஓடும்போது, அந்தந்த வண்டிகளில் வைக்கப்பட்டிருக்கும் டைனமோக்கள் (Dynamos) எனப்படும் மின்சார ஜனனிகள், ரெயிலின் சக்கரங்களின் சுழற்சியால் இயங்கி, மின்சாரத்தை இயற்றுகின்றன.

**சி. என். தியாகராஜன்,**
**கோயம்புத்தூர்.**

**டயல் என்றால் என்ன?**

டயல் (Dial) என்பது அளவீடுகள் குறிக்கப்பட்ட ஒரு வட்டம். அதிலே அளவைச் சுட்டும் ஒரு முள் (Pointer) சுற்றிச் செல்லும்படி அமைந்திருக்கும்.

மீட்டர்கள் (Meters) என்று வழங்கும் அளவுகாட்டும் கருவிகளிலே வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஏற்பாடே இது. மீட்டர்களில் எத்தனையோ வகை உண்டு.

வீடுகள், தோட்டங்கள் முதலியவற்றில் செலவழிக்கப்படும் நீரை அளப்பதற்கு ஒருவகைத் தண்ணீர் மீட்டர் (water meter) உபயோகப்படும். மின்சாரத்தை அளப்பதற்கு மின்சார மீட்டர்கள் (Electricity-meter) உதவுகின்றன.

மின்சாரமோ, அல்லது நீரோ பாய்ந்து ஓடும்போது அவை அந்தந்த மீட்டரில் உள்ள ஒரு சக்கரத்தைச் சுழலச் செய்கிறது. அந்தச் சக்கரம் ஒரு முறை சுற்றி வந்தால் இவ்வளவு தண்ணீர் அல்லது இவ்வளவு மின்சாரம் ஓடியிருக்கிறது என்பதைக் குறிக்கும். பல பல்சக்கரங்களை இணைத்துச் சுழலச் செய்து, செலவழிந்த மின்சாரம் அல்லது நீரின் அளவை டயலின் முட்கள் காட்டும்படி கருவிகளை அமைத்திருக்கிறார்கள்.

நமது வீடுகளிலுள்ள கடிகாரங்களில் மணி, நிமிஷம், நொடி முதலியவற்றைக் குறிக்கும் வட்ட வடிவமான வில்லையும் (அல்லது முகம்) ஒரு டயல்.

மோட்டார் கார் முதலியவற்றில் வேகத்தையும் தூரத்தையும் குறிப்பதற்காக வைத்திருக்கும் டயலையும், உயவெண்ணெய், மின்சாரம் முதலியவற்றின் அளவுகளைச் சுட்டுவதற்காக வைத்திருக்கும் முள் ஏந்திய வில்லைகளையும் நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

## கண்ணன் நிருபர்கள்

### தெ. ஆர்க்காடு

101 எஸ். ராமதாஸ், விழுப்புரம்.

### தஞ்சை

102 என். வி. நாதி, தலையூர்.

103 சி. பாலசுப்பிரமணியன், ஒரத்தநாடு.

### திருச்சி

104 எஸ். பி. ஸ்ரீநிவாஸன், மேலைச்சிவபுரி.

105 ஏ. சுப்பிரமணியன், மணப்பாறை.

### ராமநாதபுரம்

106 டி. கங்கைமுத்து, அருப்புக்கோட்டை.

### திருநெல்வேலி

107 ஏ. ஸ்ரீநிவாஸன், வீரராகவபுரம்.

108 பா. அமிர்தராஜு, கள்ளிக்குளம்.

### வெளி ராஜ்யம்

109 மா. பழனிச்சாமி, பெங்களூர் - 19.

110 எஸ். ரேவதி, மாதுங்கா, பம்பாய் - 19.

### இலங்கை

111 பழ. சிவன்ஜோதி, மொரட்டுவ.

112 ரா. சுப்பிரமணியன், டிக்கோயா.

114 ச. ராமசந்திரன், திரிகோணமலை.

114 மா. இராமசாமி, அட்டன்.

115 என். செல்வராஜா. யாழ்ப்பாணம்.

(இருவர் தொகுதி)

## பேனா நண்பர்கள்

1. இரா. சிவாஜி, 13, சாமிப் பிள்ளைத் தெரு, சூளை, சென்னை-7.

2. வி. ரமணன், S/o எஸ். வேங்கடராமன், 3/32 ராயப் பேட்டை, சென்னை - 14.

3. ஆர். சுவாமிநாதன், எஞ்சினியர் பள்ளி, எஸ். ஆர். கே. வித்தியாலயம், கோவை.

4. வி. ராமமூர்த்தி, அரசம் பட்டி, பாரூர் போஸ்டு, சேலம் ஜில்லா.

5. எஸ். விவேகானந்தன், 4/4. கம்மாளத் தெரு, தர்மபுரி.

6. டி. கோவர்த்தனன், 186. கடைத் தெரு, புவனகிரி, (தெ. ஆ.)

7. சுந்தரேசன், 5-ஆம் படிவம், இ-பிரிவு நகராண்மை உயர்நிலைப் பள்ளி, நல்லூர்ப் பேட்டை, குடியாத்தம்.

8. தா. சுப்பிரமணியம், முதலியார் தெரு, கந்தையா வளைவு, திரிகோணமலை, இலங்கை.

### பெண்களுக்கு மட்டும்

9. கே. மீனுக்ஷி, C/o K. சுந்தரேசன், 5. பாலகிருஷ்ணப் பிள்ளைத் தெரு, சிந்தாதிரிப் பேட்டை, சென்னை. 2.

10. வி. லலிதா, C/o வி. ரங்கநாதன், 6. ஆத்ரேயபுரம், சென்னை - 24

11. பங்கஜம், 45. கஸ்து மேட்டுத் தெரு, வேலூர். (வ. ஆ.]

12. கே. எஸ். லலிதா, C/o கே. இ. சிவராம ஐயர், 13 - K ரோடு, ஜாம்ஷெட்பூர்.

பாரஸீக ரோஜா




பொழுது விடிந்ததும் . . . . . . . . . .
ஆ! நான் இப்போது எங்கே இருக்கிறேன்? என் அருமை பூதூர் என்ன ஆனளோ?
அதோ, அந்தக் கழுகு! மீண்டும் பறக்கிறதே!
காமர் தூரத்தே கழுகு பறக்க, இவ்விதமே எட்டு நாட்கள் ஆயின. ஒன்பதாம் நாள் காலை கழுகு போன இடம் தெரியவில்லை. காமர் பூதூரை நினைத்துக் கொண்டு வழி தெரியாமல் ஒரு மலையுச்சியை அடைந்தான்.
அதோ ஒரு ஊர் தெரிகிறது!
ஊரில் ஜனநடமாட்டமே இல்லையே!
ஒரு நந்தவனம் தெரிகிறது. காமர் அதற்குள் நுழைந்ததும் திடீரென்று ஒரு ஆள் வந்து . . . .
யாரடா நீ? உனக்கு எவ்வளவு தைரியம்?
போ! இந்த இருட்டறையில் கிட. இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவன் என்றால் இங்கே உன்னைக் கொலை செய்து விடுவார்கள்.


அப்பா! அவ்வளவு மோசமான தேசமா இது?
தம்பி! கவலை வேண்டாம். நீ என் வேலைக்காரனாக மாறு வேஷத்தில் இரு!
உன் வரலாறு மனவேதனை தருகிறது. ஆண்டுக்கு ஒருமுறை ஒரு கப்பல் வரும். அதில் நீ போகலாம். அதுவரை என்னுடை இரு!
இங்கே இவ்வாறு இருக்க ஷாஜாமன் தன் மகள் இறந்து விட்டான் என்று கருதி, நகருக்கு மேற்கே ஒரு சமாதி கட்டி அல்லும் பகலும் அழுத வண்ணமாய் இருந்தார். அதே சமயம் பூதா என்ன ஆனாள் என்று பார்ப்போம்
காமர்! யார் அங்கே? காமர் இல்லையா?
அவரைக் காணோம்.
எங்கேயாவது போயிருப்பாரடி! திரும்பி வருவார்!
ரோஜாவைக் காணேமே! அவருக்கு ஏதாவது ஆபத்து ஏற்பட்டிருக்குமோ? அடி தாதி! அவருடைய ஆடைகளைக் கொண்டு வா!
ரகசியம்! ஜாக்கிரதை!

(தொடரும்)



# லீடர் மணி

**'ஆர்வி'**

அருணஜடை அர்த்தமில்லாமல் சந்துருவைப் பார்த்துச் சிரித்தார். "என்ன யோசனை பண்றே? வேறே எங்கேயும் அனுப்பிச்சுடல்லே. என் மைத்துனி வீடுதான். அந்தப் பையனைக்கூட மணிக்குத் தெரியும். இரண்டு பேரும் சினிமாவுக்கு ஒரு நாள் போய்விட்டு வந்தார்கள். ஆகையினாலே இவனுக்கு இதைவிடக்கூட அங்கே சௌகரியமாய் இருக்கும். வேணுமானா நான் சொல்றது சரியா இருக்கா இல்லையான்னு இந்தப் பயல் போய்ப் பார்க்கட்டும்" என்றார்.

சந்துரு இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் மணியின் கையைப் பிடித்து வெளியே அழைத்துக் கொண்டு வந்தான். "மணி, எனக்கு என்னமோ அவமானமாய் இருக்கு. வேணும்னா வேலைக்கு வருந்தி வருந்திக் கூப்பிடறது. வேண்டாட்டால் ஒரு நிமிஷத்துலே போகச் சொல்லிப்பிடறது. இதெல்லாம் இந்த மாதிரி மனுஷ்யர்களுக்குப் பழக்கம்போல இருக்கு. நீ என்ன சொல்றே? மாம்பலத்துக்குப் போக உனக்குச் சம்மதந்தானா? இல்லே, என்னோடேயே இப்போ மறுபடியும் வந்துடறியா? எப்படியாவது பார்த்து உனக்கு ரெண்டு நாளிலே நான் ஏற்பாடு பண்றேன்!" என்று படபடப்போடு கேட்டான்.

"நான் எங்கே வேணுமானாலும் போகத் தயார். ஆனால் அந்தப் பையனுடைய வீட்டுக்குப் போக எனக்கு இஷ்டமில்லை. பிறர் வருத்தம் தெரியாத பையன் அவன். அன்னிக்கு ஒரு நிமிஷத்திலே அவன் குணத்தைப் பார்த்துப் புட்டேன்!" என்றான் மணி.

"அப்படியானால் சரி; வா, அவருக்கு ஒரு 'குட் பை' வைத்து விட்டுப் போய்விடுவோம்" என்று உள்ளே போனான். மணியும் பின்னால் தயங்கியவாறு சென்றான்.

"என்ன ரெண்டு பேருமா ரகசியம் பேசிண்டு வறேள்?" என்று அசட்டுச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே கேட்டார் அருணஜடை.

"ரகசியம்தான், நீங்க ஒரு பிளான் செய்து வைத்திருக்கேளா? அதேபோல நாங்களும் ஒரு பிளான் செய்து கொண்டோம். அதைத்தான் பேசிண்டு வறோம்."

"அது என்ன பிளான் அது?"

"அதுவா? என் சிநேகிதனை நானே அழைச்சிண்டு போயிடறதாகப் பிளான். மாம்பலத்துக்கோ தாம்பரத்துக்கோ போறதாக அவனுக்கு உத்தேசமில்லை."

"ஹ ஹ! என்னது! மாம்பலத்துக்கு வரச் சொல்வதாகச் சொல்லிப்பிட்டேனே, அவர்களுக்கு! இப்ப வந்து இப்படிச் சொல்றியே!"

"அதுக்கு என்ன பண்றது? முன்னாடியே இவனுடைய சம்மதத்

தையும் ஒரு வார்த்தை கேட்டிருந்தால் சரியாகப் போயிருக்கும். இவனே போயும் இருப்பான்..''

''ஓஹ்ஹோ! இவன் என்ன பெரிய கவர்னருடைய செக்ரட்டரியோ? இவனை முன்னாடி நான் வந்து, 'அப்பா-ராஜா-மாம்பலத்துக்குப் போறியா'ன்னு கேட்டிருக்கணுமோ?'' என்று கேலியாகச் சொன்னார் அருணஜடை.

''அவன் வந்து அவ்வளவு பெரிய ஆள் இல்லைதான், ஸார்! ஆனா அவன் ஆடோ மாடோ அல்ல, நம்ம இஷ்டப்படி இன்னொருவன் வீட்டுக்கு ஓட்டிவிட. அதனாலே..'' என்று சந்துரு சாந்தமாகவே சொல்லி முடிப்பதற்குள் மணி, ''உங்களுக்கு இதனாலே ரொம்ப சிரமம். குட் பை. நாங்கள் வருகிறோம்!'' என்றான்.

அருணஜடையின் முகம் சிவந்து விட்டது. ''இரு இரு. உன் கணக்கைப் பார்த்து உன் சம்பளத்தை இப்பவே வாங்கிண்டு போயிடு'' என்றார்.

அதைத்தான் வேண்டாம் என்பானேன் என்று இருவரும் அமைதியாக நின்றார்கள். அருணஜடை எழுந்து உள்ளே போனார். திரும்பி வரும்போது பின்னால் ஒரு பையனுடன் வந்தார். முதலில் மணிக்கு அவன் முகம் சரியாகத் தெரியவில்லை. வெளிச்சத்தில் அவன் முகத்தைப் பார்த்ததும் அவனுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அதேபோல அந்தப் பையனும் கையில் வைத்திருந்த பணத்தை அந்த அதிர்ச்சியில் கீழே போட்டுவிட்டு நின்றான். இதைச் சந்துருவும் அருணஜடையும் கவனித்தார்கள்.

''டேய் சேஷா! பணத்தை எல்லாம் கீழே போட்டுட்டியே!'' என்றார் அருணஜடை.

மணிக்கு மறுபடியும் தூக்கி வாரிப்போட்டது. சேஷன் என்று யாரை அருணஜடை கூப்பிட்டாரோ, அவனை மணிக்கு நன்றாகத் தெரியும். திருட்டுக் கங்கன்தான் அவன்!

''ஏண்டா கங்கா, நீதானா முந்தி இங்கே இருந்த பையன்? பேஷ், பேஷ்! உன் பேரை இங்கே சேஷன்னு மாத்தி வச்சிண்டிருக்கியா? சரியான வேலைதான்!'' என்று பணத்தை வாங்கிக் கொண்டான் மணி.

''எண்ணிப் பார்!'' என்றார் அருணஜடை. உடனே கங்கனைப் பார்த்து, ''ஏண்டா, இவனை உனக்கு முந்தியே தெரியுமா?'' என்றார்.

அதற்குக் கங்கன் என்ன பதில் சொன்னானோ, அவர் அப்புறம் என்ன செய்தாரோ அதையெல்லாம் நின்று பார்த்துக்கொண்டிருக்க அவர்கள் அங்கே இல்லை. வெளியில் வந்துவிட்டார்கள்.

சந்துருவுக்கு உண்மை விளங்கி விட்டது. ''அவனைச் சும்மா விட்டிருக்கப்படாது, மணி! இப்பவும் என்ன மோசம்? நம்ம குப்புசாமியிடம் ஒரு வார்த்தை சொல்லி வைக்க வேண்டும். நேரே குப்புசாமியைப் பார்த்துவிட்டுப் போய் விடலாம்'' என்றான்.

ஆனால் குப்புசாமி வீட்டில் இல்லை. விசாரித்ததில் ஏதோ கேஸ் விஷயமாகப் பங்களூர் போயிருப்பதாகத் தெரிந்தது.

சந்துருவின் வீட்டில் மணியை வைத்துக் கொள்வதில் எவ்வளவோ கஷ்டங்கள் உண்டு. இதைப்பற்றி இரண்டு பேரும் வாய் விட்டுப் பேசிக் கொள்ளா விட்டாலும், அதை உணர்ந்து கொண்டவர்கள் போலவே நடந்து கொண்டார்கள். எப்படியும் மணிக்கு வேறு ஓர் இடம் கிடைக்கும் வரையில் அவன் அங்கே இருந்துதானே ஆகவேண்டும்!


பங்களா வாசல் வரும் வரையில் இருவரும் எப்படி ஏற்பாடு செய்து கொள்வது என்று பேசிக் கொள்ளவில்லை. ஆனால் மணி உடனே, ''சந்துரு, நான் உள்ளே வரவேண்டாம் என்று பார்க்கிறேன். கார் ஷெட்டுக்குப் போய் விடுகிறேன்!'' என்றான்.

சந்துருவுக்கு அந்த யோசனை பளிச்சென்று ஒரு வழி காட்டியது போலிருந்தது. அவன் அப்பாவுக்குத் தெரியாமல் எப்படி இவனை வைத்துக் கொள்வது, அவன் தங்கைக்குத் தெரியாமல் மணி எப்படி அங்கே தங்கியிருப்பது

என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்த சந்துரு ஆசுவாசமாக இந்த யோசனையைக் கேட்டதும் பெருமூச்சு விட்டான். அந்தப் பங்களாவிலேயே அப்பாவின் காற்றே படாத இடம் எதுவென்றால் அந்தக் கார் ஷெட் ஒன்றுதான். அவர் அந்தப் பக்கமே வரமாட்டார். அவன் தங்கையும் அங்கே வருவதில்லை. அதனால் மணி இரண்டு நாளோ, நாலு நாளோ அங்கே சங்கடமில்லாமல் இருக்கலாம். டிரைவர் கண்ணப்பன் இருக்கும் வரையில் மணியைப்பற்றிச் சந்துரு அதிகம் கவலைப்பட வேண்டியதில்லை. அதனால் அவன், ''எனக்குக்கூட இந்த யோசனை எட்டவில்லை, மணி. அதுதான் சரியான இடம். நீ அங்கேயே இரு. மேலே ஆக வேண்டியதைப்பற்றி அப்புறம் யோசிக்கலாம்'' என்று விடைபெற்றுக்கொண்டு அவன் உள்ளே போனான்.

மணிக்கு அங்கே படுக்க இடம், காற்று வருவதற்கான ஏற்பாடு, இதையெல்லாம் செய்து விட்டு டிரைவர் கண்ணப்பன் வெளியிலே பூட்டை அத்துக்குப் பூட்டிவிட்டு, சாவியைச் சந்துருவிடம் கொடுத்து விட்டுப் போனான்.

மணி வண்டியினுள்ளே மெத்தையில் மல்லாந்து படுத்தபடி குருட்டு யோசனை செய்து கொண்டிருந்தான். அவன் நினைவில் கங்கன்தான் அடிக்கடி வந்து கொண்டிருந்தான். இருட்டுப் பாதையில் முதல் முதல் அவனைச் சந்தித்தது முதல் இன்று அருணைஜடையின் பங்களாவில் பார்த்தது வரையில் அவன் யோசனை வட்டமிட்டு வந்தது. 'அட, திருட்டுப் பயலே! நீதானா முந்தி அருணைஜடையின் வீட்டில் அட்டெண்டராக இருந்தவன், முப்பது ரூபாய் பணத்துடன் ஓடியவன்? அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டுதான் மூங்கிலடிக்கு வந்திருந்தாயா? அது செலவழிந்த பிறகுதானா என்னிடமிருந்த பர்ஸைத் திருடிக்கொண்டு, என்னை நடுச் சந்தியில் திண்டாட விட்டுப் போனாய்? இருக்கட்டும்; உன்னை இவ்வளவு லேசில் விட்டுவிடுவேன் என்று நினைக்காதே!' என்று தன் மனக்கண் எதிரே தோன்றிய



கற்பனைக் கங்களைப் பார்த்துக் கறுவினான்.

எங்கேயோ தூரத்தில் ஒன்பது மணி அடிக்கும் ஓசை கேட்டது. உடனே வெளியில் யாரோ பூட்டைத் திறக்கும் சத்தம் மெல்ல வந்தது. சற்றுப் பொறுத்து மெல்லிய குரலில், ''மணி, மணி! எங்கே இருக்கே?'' என்று அழைத்துக் கொண்டே சந்துரு உள்ளே நுழைந்து வந்தான்.

கம்மென்று குழம்புஞ் சாதத்தின் வாசனையும் ஊறுகாயின் மணமும் அவனோடு கூடவே வந்தன.

''என்ன சந்துரு?''

''உனக்குச் சாப்பாடு கொண்டு வந்திருக்கேன். ஆனா இந்த இருட்டிலே நீ எப்படிச் சாப்பிடுவே? விளக்கைப் போட்டா அப்பாவுக்குத் தெரிந்து போகுமே!'' என்றான் சந்துரு.

''எனக்குப் பசிக்கவேயில்லையே. நீ ஏதுக்காகக் கொண்டு வந்தே? அதையும் தவிர எங்கே உட்கார்ந்து சாப்பிடறது? வேண்டாம் சந்துரு. ராத்திரிப் பொழுதை எப்படியாவது தள்ளிவிடறேன்'' என்றான் மணி. ஆனால் சாதம், ஊறுகாயின் வாசனை எல்லாம் அவன் நாக்கில் தண்ணீர் ஊறச் செய்தது. சாயங்காலமெல்லாம் ஓடி ஆடிய களைப்பில் வயிற்றில் நல்ல பசியும் இருந்தது.

''சீச்சீ! இதோ இந்த ஷெட்டுக் கதவு வழியாக வெளிச்சத்தின் கோடு விழுந்திருக்கு. அதிலே உன்னாலே சாப்பிட முடியாதா?'' என்றான் சந்துரு. அவன் குரலில் தென்பட்ட வருத்தத்தைக் கண்டு மணி அவனுக்கு உற்சாகத்தைக் காட்ட எண்ணினான்.

''ஏன் முடியாது? பேஷாச் சாப்பிடலாமே! அந்தப் பொட்டலத்தைக் கொண்டா இப்படி!'' என்று வாங்கிக்கொண்டு, வெளிச்சத்தின் கீற்றில் பொட்டலத்தைப் பிரித்தான்,

திடீரென்று சந்துரு எதையோ கண்டு பிடித்தவன் போல, ''இரு இரு! வந்து விட்டேன். இவ்வளவு சிரமம் எதுக்கு? வண்டிக்குள் இருக்கும் சின்ன விளக்கைப் போடறேன்!'' என்று மோட்டாரினுள் ஸீட்டுக்கு மேல் உள்ள விளக்கைப் போட்டான். அதன் மங்கலான வெளிச்சமே அந்த அறையை ஒளி மயமாக்கியது.


பிளாட்பாரத்தில் சாம்பார் சாதம் விற்பது போல அந்தப் பொட்டலத்தில் ஒரு சிறு இலையில் காபேஜ் கறியும் கத்திரிக்காய்த் தானும் தனியே இருந்தன. மணி கவளம் கவளமாக உருட்டிப் போட்டுக் கொண்டான். சாதம் தேவாமிர்தமாக இருந்தது.

''டேய், மெதுவாடா? தொண்டையிலே அடைச்சுக்கப் போறது? தண்ணிக்கு எங்கே போறது?'' என்று சந்துரு அவனை அன்போடு பார்த்துக்கொண்டிருந்தான். மணியின் வயிறு, நெஞ்சம் எல்லாம் குளிர்ந்தன. அவன் நெஞ்சே அமிர்தத்தினால் குளிர்ந்தது போல் இருந்தது. சாம்பார் சாதம் ஆனதும் தயிர் சாதப் பொட்டலத்தைப் பிரித்தான் மணி. ஜோரான வடு மாங்காய் ஊறுகாயும், வறுத்த குடமிளகாய் ஊறுகாயும் மூக்கைத் துளைத்தன. ஆடைத் தயிர் போட்டுப் பிசைந்த சாதத்தை அவனால் சாப்பிடவே முடியவில்லை. பாதியிலேயே வயிறு நிரம்பி விட்டது. மீதியை என்ன பண்ணுவது?

''மெதுவாக அதையும் சாப்பிட்டு விடு'' என்று உபசாரம் செய்தான் சந்துரு.

விழி பிதுங்க மணி அதையும் கஷ்டப்பட்டுச் சாப்பிட்டுத் தீர்த்தான்.

அன்று இரவு மணிக்குப் படுத்தது தான் தெரியும். பொழுது விடிந்து வெகுநேரமான பிறகு தான் அவனுக்கு விழிப்பு வந்தது. அதற்கு முன்னமே கண்ணப்பன் வந்து, கதவைத் திறந்து வண்டியைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அவன் விழித்துக் கொண்டதை யறிந்த கண்ணப்பன், ''தம்பி! அதோ செம்பிலே தண்ணீர் இருக்கு. பல்லைத் தேய்த்துவிட்டு, அதோ அந்தக்



கிளாசிலே இருக்கும் ராகி மால்ட்டைக் குடி'' என்றான்.

அன்று முழுவதும் அநேகமாக மணிக்கு ஷெட்டிலேயே வாசம் செய்ய வேண்டியதாகி விட்டது. சந்துருவின் அப்பா ஆபீஸ் போனதும் அவன் பங்களாவுக்குள் போய் சந்துருவின் அம்மாவைப் பார்த்துவிட்டு, அங்கேயே குளித்துச் சாப்பிட்டுவிட்டு, மறுபடியும் ஷெட்டுக்கு வந்துவிட்டான்.

மாலை நாலு மணிக்கெல்லாம் சந்துரு வந்துவிட்டான். இருவரும் முதல் நாளைப் போலவே கால்பந்து விளையாடச் சேர்ந்து போனார்கள். ...ன்றும் மணியின் பாடு யோக ...த்தான் இருந்தது. வருகிற ... எப்படி அடித்தாலும் அது ...க்கு நல்ல பயனைத் தந்தது. ... குறிப்பிட்டதுபோல ... சூட்சுமமே அவனுக் ...ப் போய்விட்டது போலிருந்தது. ஒவ்வொரு கட்சியும் அவனைப் போட்டி போட்டுக் கொண்டு வருந்தி அழைத்தது. இதனால் எல்லாம் மணியைவிடச் சந்துருவுக்கே அதிகப் பெருமையாக இருந்தது. அந்தக் கிளப்பின் விதிகளின்படி மணி உடனே மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப் பட்டான்.

அஸ்தமனம் ஆனதும் இருவரும் வீடு திரும்பினார்கள். இவ்விதமே இரண்டு மூன்று நாட்கள் சென்றன. அடுத்த நாள் காலையில் சந்துரு வந்து, ''மணி, உனக்கு ஓர் இடம் பார்த்துவிட்டேன். இன்னிக்கே அந்த வீட்டுக்கு நீ போகலாம். சாயங்காலம் வழக்கம்போல விளையாட்டுக்கும் வரலாம்'' என்று கூறினான். மணிக்கு அந்தச் செய்தி சந்தோஷத்தைக் கொடுத்தது.

(தொடரும்.)

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
3/1/78
சென்னை-600 008

# எங்கள் பகுதி

## * வாழ்க கண்ணன்!

அழகுத் உடை [illegible] அணிந்து கை[illegible] [illegible]டியும் ஊசலாட, [illegible] ஆனந்தம் மின்ன, 'இன்று ஏடு தூக்கும் நாங்களே நாளை நாடு காப்போம்' என்ற கர்வம் பள பளக்க, அக்காவும் தம்பியும் பள்ளி செல்லும் அழகே தனி. போட்டிப் பரிசாகக் குண்டுச் சீமாவுக்கு யானையே வந்ததை நினைக்கும் போது சிரிப்பும், அப்பாவுக்கு என்ன பதில் சொல்வானே என்று நினைக்கும்போது பயமும் ஏற்படு கின்றன. துன்பத்தைப் பொறுத் துக்கொள்பவர் கட்டாயம் இன்ப மடைவர் என்பதை 'வீடர் மணி' அழகாக விளக்குகிறுன். ஏழு நாட் களாகியும் வாடாத 'பாரஸீக ரோஜா' எப்போதும் எங்கள் உள்ளத்திலிருந்து வாடாதபடி அமைந்துள்ளது. 'பணப் பை' என்ற கதையை ஒட்டி அநேக கதைகள் படித்திருக்கிறோம். 'வல்லவனுக்கு வல்லவன் வையகத் திலுள்ளான். இதை நன்கு விளக்கு கிறது 'வேலியே காய்த்தது.' நல்ல நீதி நிறைந்த கதை. பிறர் பொருளுக்கு ஆசைப்படாதே என்று அருமையாகவே போதிக் கிறது, 'இரு திருட்டு'. நாடகம் நல்ல ஒரு பொழுதுபோக்கு. 'ஏழைச் சிறுவன்' கதை 'முயற்சி திருவினையாக்கும்' என்ற கருத்தை அறிவிக்கிறது. அருமையான சம்ப வம் வேடிக்கையாக உள்ளது. கவிதை மூலமாகவே காகிதத்தின் வரலாற்றை மிக நன்ருகக் கூறி விட்டார் சோமசுந்தரம். மற்றப் பகுதிகள் வரவேற்கத் தக்கவை. எங்களைப் பலவிதங்களிலும் ஊக்கு விக்கும் கண்ணன் வாழ்க, வாழ்க!

—ஜீவா, வில்லிவாக்கம்.

## வார இதழாக்குக!

எண்ணற்ற தம்பி தங்கைகள் பள்ளி செல்வதை நேரில் கண்டிருக் கிறேன். அதைத் தத்ரூபமாய் அழகாகச் சித்திரிக்கிறது முகப்பு.

அதிருஷ்ட எண்களைக் கண்டேன். ஆனுல் என் எண் அதில் இல்லை. அதிருஷ்ட எண்களையுடைய தம்பி தங்கையர்களுக்கு என் அன்பு கலந்த வாழ்த்து. 'குண்டுச் சீமா' வீட்டுக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட் டுத் திருவிழா வேடிக்கை காணச் செல்வதும், அப்பாவின் எதிர் பாரா திடீர் விஜயமும், கஜேந்திரா போட்டியில் முதல் பரிசாக யானை வந்து சேர்வதும் எல்லாம் ஜோராய் அமைந்துள்ளன.

பணப்பை நல்லபடியாகவே முடிகிறது.

'வேலியே காய்க்கும்' என்று நினைத்தான் முருகையா. ஆனுல் வேலியோ (கெட்ட) பயிரையே அழித்துவிட்டது.

'இரு திருட்டு' உள்ள உணர்ச்சி யைத் தொடும்வகையில் அமைந் திருக்கிறது.

எங்கள் பகுதியின் இரு கடிதங் களும் பிரமாதம்.

இவ்வளவையும் ஆர்வமி[illegible]தி யால் ஒரே மூச்சில் படி[illegible]து முடித்து விட்டேன். முடித்த வுடனே மறு கண்ணன் இதழை எப்பொழுது காண்போம் என்ற ஒரே ஆவல். ஆனுல் பதினைந்து தினங்கள்வரை எதிர்பார்த்து ஏங்கவேண்டியிருக்கிறது. இந்த ஏக்கம் என்னைப்போன்ற அநேக ஆயிரக்கணக்கான தம்பி தங்கை களுக்கு இருக்குமென நம்பு கிறேன். இந்த ஒரே ஏக்கத்தைத் தணிக்கத் தாங்கள், வார வெளி யீடாகக் கண்ணனைப் பல புதிய அம்சங்களையும் சேர்த்துப் பொ[illegible] வுடன் விளங்கச் செய்வீர்களா[illegible]

—M. ராமன், ம[illegible]

* பரிசு பெற்ற கடிதம்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARAT[illegible]
AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS[illegible]
ASSOCIATE EDITOR: R. V[illegible]RAMAN.

# கண்ணன்

## அதிருஷ்ட எண்கள் விளக்கம்

இதோ பக்கத்தில் ஒரு தொடர் எண் (Serial number) அச்சிடப்பட்டிருக்கிறது. இந்த எண் அதிருஷ்ட எண்ணாக இருக்கலாம். எல்லாக் கண்ணன் பிரதிகளிலும் இதேமாதிரி ஒவ்வோர் எண் உண்டு. அவற்றில் பத்து எண்கள் குலுக்கி எடுக்கப்படும். அந்தப் பத்தும் அதிருஷ்ட எண்கள். இந்த இதழுக்குரிய அதிருஷ்ட எண்கள் 15-9-55-ஆம் தேதி இதழில் பொருளடக்கத்திற்குப் பக்கதில் வெளியாகும். அந்த அதிருஷ்ட எண்ணுள்ள இதழ் வைத்திருப்பவர்களுக்குப் பரிசுப் பணம் உண்டு.

## கம்பியிலே கண்கள்



போட்டோ: புஷ்பத்துறை சுப்பிரமணியம்

(Regd. as a News paper in Ceylon.) Reg. No. M. 5542


## விற்பனையாகின்றன!

### கருத்தைக் கவரும்

# இரு கண்ணன் வெளியீடுகள்

★ **அசட்டுப் பிச்சு - ஆசிரியர்: ஆர்வி** விலை 1/-

ஏ: பி: என்றால் ஐயாசாமி அவர்களுடைய மகன் பிச்சுமணி என்பவனைத்தான் குறிக்கும். ஆனால் ஏ - என்றால் அசடு. பி - என்றால் பிச்சு என்று ஆகி, மற்ற ஊர்ப் பிள்ளைகள் எல்லாம் அவனை அசட்டுப் பிச்சுவாக்கிவிட்டார்கள். அவனுடைய தோற்றம், உடை, பேச்சு இவற்றிற்கும் அவனுடைய பெயருக்கும் அடடா, எத்தனை பொருத்தம். ஆனால்,—அவனுடைய அதிருஷ்டம் இருக்கிறதே, அதை மட்டும் யாராலும் மாற்றவே முடியவில்லை. பிரிஞ்ஜால், ஸ்ரீகாந்த், புலிக்குட்டி குடுமி வைத்தி இவர்களுக்கு எல்லாம் அசட்டுப் பிச்சு ஒரு பெரிய புதிராகவே ஆகிவிட்டான். பெரிய பெரிய திருட்டுக் கேஸ்களையெல்லாம் அசட்டுப் பிச்சு அநாயாசமாகக் கண்டுபிடித்துவிடுகிறான். காணாமல் போன பெண், அகப்படாத பக்காத் திருடன் இவர்களையெல்லாம் பிடித்துக் கொடுத்த அசட்டுப் பிச்சு இன்ஸ்பெக்டர் குருப்பின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, அதன் மூலம் நம்முடைய அபிமானத்துக்கும் பாராட்டுதலுக்கும் பாத்திரமாகிவிடுகிறான். அருமையான சம்பாஷணைகள்; அடுக்கடுக்கான சம்பவங்கள்; சுவையான கதைப் போக்கு; அழகான படங்கள் - எல்லாம் நிறைந்த இனிய புத்தகம் அசட்டுப் பிச்சு. 128 பக்கள். நல்ல காகிதம்.

★ **ஜம்பு - ஆசிரியர்: ஆர்வி** விலை அணா [illegible].

கண்ணன் வெளியீடுகளிலே பலவகையான புத்தகங்கள் உண்டு. பழங்காலத்துக் கட்டுக் கதைகள் உண்டு; அறிவும் நீதியும் புகட்டும் தந்திரக் கதைகள் உண்டு; சரித்திரக் கதைகள் உண்டு; விஞ்ஞான விந்தைகளையும் பெரியோர்களின் பாலியப் பருவத்து நிகழ்ச்சிகளையும் கதைபோலச் சொல்லும் கட்டுரைகள் உண்டு; சித்திரங்கள் உண்டு, சித்திரக் கதைகளும் உண்டு. அவற்றிலே இந்த ஜம்பு இந்தக் காலத்துக் கதை. இதிலே கப்பல் வருகிறது; சர்க்கஸ் குரங்கு வருகிறது. சிங்கமும் புலிகளும் வருகின்றன; அவற்றை ஆட்டி வைப்பவனும் வருகிறான். இன்ஸ்பெக்டர் வருகிறார். மோட்டாரும் மோட்டார்ப் படகும் வருகின்றன. ரகசியக் கடிதம்கூட ஒன்று ஜம்புவிடம் வந்து அகப்பட்டுக்கொள்கிறது. அதிலிருந்துதான் திகைப்பையும் வியப்பையும் தருகிற இந்த அருமையான கதை தொடங்குகிறது. நடுநடுவே அழகான படங்கள் இருக்கின்றன.

**கண்ணன் கழக அங்கத்தினர்களுக்கு 12½% கமிஷன் உண்டு**

**தபால் செலவு தனி.**

**விவரங்களுக்கு:**

**கலைமகள் காரியாலயம் : : மயிலாப்பூர், சென்னை**